விலை: 90.00
பக்கங்கள் : 12 + 12 viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23

ஒலி 070 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 15 ஞாயிற்றுக்கிழமை (27.02.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

### செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம்

# யாழ்ப்பாணத்தில் போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது

## மாவட்ட அரச அதிபர் மகேசன் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணத்தில் போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது. பொது மக்கள் தேவையில்லாத செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம் என யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.**

எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக வெளியான செய்தி தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

யாழ். மாவட்டத்தில் எரிபொருள் பொதுமக் 11

### நாட்டில் மேலும்

# +988 பேருக்கு தொற்று

(கொழும்பு)

கொரோனாத்தொற்று 11

### கொரோனா

# 24 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில்மேலும்24 கொரோனா மரணங்கள் உறுதிப் படுத்தப்பட்டுள்ளன. 11

## திங்கள் முதல் மீண்டும் மின் துண்டிப்பு அமுல்

(கொழும்பு)

தற்போதைய சூழ்நிலையின் அடிப்படையில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மீண்டும் மின்சார துண்டிப்பை அமுல்படுத்த வேண்டிய நிலை ஏற்பட் டுள்ளதாக பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரி வித்துள்ளது.

எவ்வாறாயினும் சனி, ஞாயிறு இரவு 11

# மோதல் தொடர்கிறது

## ரஷ்யாவை எதிர்த்து உக்ரைனும் கடும் தாக்குதல்



(கீவ்)

- உக்ரைனுக்கு ஆதரவு தெரிவித்தும் ரஷ்யாவுக்கு கண்டனம் தெரிவித்தும் உலகம் முழுவதும் போராட்டம்.
- பேச்சுவார்த்தைக்கு உக்ரைன் முன்வராததால் தாக்குதல் தீவிரமடையும் என ரஷ்யா தெரிவிப்பு.
- 3,500 ரஷ்ய படையினர் கொல்லப்பட்டுள்ளதாக உக்ரைன் அறிவிப்பு.

11ஆம் பக்கம் பார்க்க

### வெவ்வேறு விபத்து சம்பவங்கள்

## யாழில் மூவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற வெவ்வேறு விபத் துச் சம்பவங்களில் மூவர் உயிரிழந்துள்ளனர்.

மயிலங்காட்டுச்சந்தியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் அதே இடத்தினை சேர்ந்த விஸ் வர் அப்புக்குட்டி (வயது-67) என்ற குடும்பஸ்தர் உயிரி ழந்துள்ளார்.

சைக்கிளில் சென்ற வரை பின்னால் வந்த லொறி மோதிய திலேயே மேற் 02

### தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்கின்றி

# வெற்றி பெற முடியும் என்பதை சிங்கள மக்கள் மாற்றியுள்ளனர்

## ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழ், முஸ்லிம் மக்களின் வாக்குகளின்றி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற முடியும் என்பதை சிங்கள மக்கள் மாற்றியுள்ளனர் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள் ளார்.

இதேவேளை ஜனாதிபதித் 11

### யாழ்.மாவிட்டபுரத்தில்

## புகையிரதம் மோதியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் பகுதியில் நேற்றுச் சனிக்கிழமை பிற்பகல் நடந்த புகையிரத விபத் தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரி ழந்துள்ளார்.

புகையிரதக் கடவையில் சமிக்ஞை விளக்கு ஒளிர்ந்து கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் புகையிரதக் கடவை யைக் கடக்க முற்பட்ட போதே குறித்த சம்ப 11

### எரிபொருள் விலையை

# அதிகரிக்கும் தீர்மானம் எடுக்கப்படவில்லை

## எரிசக்தி அமைச்சு

(கொழும்பு)

எரிபொருள் விலைகளை அதி கரிப்பது தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இதுவரை தீர்மானம் எதையும் எடுக்க 11

### எரிபொருளுக்காக விசுவமடுவில் குவிந்த பொதுமக்கள்



### மார்ச் முதல்

# வெளிநாடு செல்பவர்களுக்கு பிசிஆர் தேவையில்லை

(கொழும்பு)

பூரண தடுப்பூசி செலுத்திக் கொண்ட இலங்கையர் கள் வெளிநாடு செல் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் நாவற்குழியில் 210 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் (நிலப்பரப்பு)
- ஏ9 வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 மீற்றர் தூரம்
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 8 கி.மீ தூரம்
- lanka ashok leyland வாகன விற்பனை நிலையத்திற்கு அருகாமை
- 18 அடி பாதையுடன் இயற்கையான சூழல்
- நல்ல தண்ணீர் ஊற்று நிலம்.




(10386)

077 623 4204, 077 288 0152
076 658 3621, 077 911 6983

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (10058)

☎-070 640 5951
e-mail : engchelvam@gmail.com

## சமையல், பராமரிப்பாளர் தேவை

நன்றாக சமையல் தெரிந்த தமிழ் பணிப்பெண் கொழும்பிலுள்ள வீட்டில் தங்கியிருந்து சமையலுடன் வீட்டையும் நன்றாக பராமரிக்கத் தேவை. (இளைய மற்றும் நடுத்தர வயதினர் விரும்பப்படுவர்.)

071 817 4417 (C-1650)


## யாழில்....

படி விபத்து இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மிருசுவிலில் துவிச்சக்கரவண்டியில் சென்றவர் மீது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயரிழந்துள்ளார்.

இதில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி நாகரத்தினம் (வயது-68) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

சுழிபுரம் கிழக்கில் மாபிளை துடைப்பதற்டகு பயன்படுத்தும் திரவத்தினை தவறுதலாகக் குடித்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த மாரிமுத்து தெய்வேந்திரம் (வயது-73) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர்களது மரணவிசாரணையை நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம)



## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரத்தில் ஏ9 வீதி, ஸ்ரேசன் றோட் சந்தியிலிருந்து 25 மீற்றர் (80 அடி) தூரத்தில் சாவகச்சேரி இலங்கை வங்கிக்கு மேற்குப் புறமாக ஸ்ரேசன் றோட்டில் 4 பரப்புக் காணி நல்ல தண்ணீர்க் கிணற்றுடன் சுற்றிவர மதிலுடன் உடன் விற்பனைக்குண்டு.

(10385)
074 243 1789
075 200 4209
077 416 2296


# மரண அறிவித்தல்

## சுப்பையா சுந்தரம்



கிளிநொச்சி முரசுமோட்டை 1ஆம் யூனிற்றை வசிப்பிடமாகக் கொண்ட சுப்பையா சுந்தரம் அவர்கள் கடந்த 22.02.2022 (செவ்வாய்க்கிழமை) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சுப்பையா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி கணபதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் இராசமணியின் அன்புக் கணவரும் இராசரத்தினம், தர்மரத்தினம், நடேசலிங்கம், ஜமுனா ராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜெகதேவி, கனகாம்பிகை (புஸ்பா), விமலாதேவி, கனகரத்தினம் (கணேஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் தசிதரன் - ஜனனி, சாருஜன் - ஜெயவேணி, மோஜி, வினோத் - நத்தலி, நிரோஷன், நவீனா - வினோத், ஜனனன், அகினா - கஜன், அஜன் - வைஷ்ணவி, அபிரன் ஆகியோரின் அன்புப் பேரனும் நீலே, லூக்கா, கயல், யுகன், அபிமன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த 23.02.2022 (புதன்கிழமை) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஐயன் கோவிலடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

1ஆம் யூனிற்,
முரசுமோட்டை, கிளிநொச்சி. (C-3854)


# Vacancy

- **Manager**
  Gender : Male, Age : 50 - 70
- **Computer Instructor**
  Gender : Female, Age : 22 - 35
  Expect : Programming or Web Designing
- **Telephone Operator**
  Gender : Female, Expect : Sinhala
  Time : Full Time/ Part time / Work from home
- **Computer Operator**
  Gender : Male, Part time (Night)

✆- 076 362 2747 (10398)

# வேலை வாய்ப்பு

கிளிநொச்சியில் உள்ள Bar ஒன்றிற்கு பின்வரும் ஊழியர்கள் உடன் தேவை.

- Bar Man ( மதுபான விற்பனையாளர் )
- பகுதிநேர கணக்காளர் ( காலை 6.00 - 8.00 மணிவரை ) கிளிநொச்சியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
- பிரதான கணக்காளர்
- முகாமையாளர்

தங்குமிடம், உணவு இலவசம்

✆-077 788 7271 (10402)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையவழி குற்றச் செயல்களில் ஈடுபட்டால்

# 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை- அஜித்ரோஹண

(கொழும்பு)

**படங்களை காண்பித்து பெண்களை அச்சுறுத்தும் குற்றச் செயல்கள் அதிகரித்துவருகின்றன.எனவே அவதானத்துடன் செயற்பட வேண்டும் என சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.**

தற்போது குற்ற விசாரணை பிரிவுக்கு நாளாந்தம் 15 முதல் 20 முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே இணைய வழி மோசடிகள் மக்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபடுகின்றவர்கள் பிடியாணை இன்றி கைது செய்யப்படுவார்கள்.

அவர்களுக்கு சுமார் 3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ரி)



## மஹோற்சவம் இடம்பெறாது

(குப்பிளான்)

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரர் ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளமையால் இம்முறை வருடாந்த மஹோற்சவப் பெருந் திருவிழா இடம்பெற மாட்டாது என மேற்படி ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார்.

இதேவேளை, மேற்படி ஆலயத் திருப்பணி வேலைகள் தற்போது மும்முரமாக இடம்பெற்று வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (4-6-18)

# பச்லெட்- இலங்கைக்குழு மார்ச் 2 இல் சந்திப்பு

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49வது அமர்வில் இலங்கை விவகாரத்தை முன்வைக்க அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய உயர்மட்ட குழு ஜெனீவா விற்கு சென்றுள்ளது.

குறித்த தூதுக்குழுவினர் மார்ச் 2 ஆம் திகதி ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்செல் பச்லெட்டை சந்திக்கவுள்ளனர்.(ரி)




மகாஜனக் கல்லூரி முன்னாள் கணிதபாட ஆசிரியை அமரர் சௌபாக்கி யவதி இராஜரட்ணம் நினை வாக வடமாகாண ரீதியாக தரம் 8 மாணவர்களுக்கு நடத்தப்பட்ட மகாஜனன் கணித, விஞ்ஞான போட்டி யில் வெற்றி பெற்ற மாண வர்களுக்கான பரிசளிப்பு விழா நேற்று இணுவில் அக்ஷய மஹால் மண்டபத்தில் நடைபெற்றது. (படம்- கணேசலிங்கம்)


காரைநகர்
கிழவன்காடு கலாமன்றம்
நடாத்தும்
ஸ்தாபக தின நிகழ்வு
(ஸ்தாபிதம் - 01.03.2002)

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு,காரைநகர்.
காலம் : 01.03.2022 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணி (சிவராத்திரி தினம்)

தலைமை
திரு. ந. சோதிநாதன் அவர்கள்
( ஸ்தாபகரும் தலைவரும், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர் )

விருந்தினர்கள்
உயர்திரு. இ. இளங்கோவன் அவர்கள்
( செயலாளர், நிதித் திட்டமிடல் - உள்ளூராட்சி அமைச்சு )
உயர்திரு ம. பிரதீபன் அவர்கள்
( மேலதிக அரசாங்க அதிபர், மாவட்டச் செலகம், யாழ்ப்பாணம் )

கலைமாடக்கோன்
திரு. திருமதி சிவஞானம் உமாதேவி தம்பதியினர்
( கௌரவ உறுப்பினர், கிழவன்காடு கலாமன்றம், காரைநகர் )

கௌரவிப்புரை
பண்டிதை யோகலட்சுமி சோமசுந்தரம் அவர்கள்

நிகழ்ச்சி நிரல்
- கௌரவம் பெறுபவர் அழைத்து வருதல்
- ஸ்தாபக தின உரை
- விருந்தினர் உரை
- உயர்விருது வழங்கிக் கௌரவித்தல்

நிகழ்ச்சிகள்
இசைக்கச்சேரி
பாட்டு - இசைக்கலைமணி ஸ்ரீமதி வாசஸ்பதி றஜீவன்
வயலின் - இசைக்கலைமணி கேதீஸ்வரன் வேலதீபன்
மிருதங்கம் - லயஞானி நல்லை க. கண்ணதாஸ்
கெஞ்சிரா - இளஞ்சுடர் க. இசைநிலவன்
கடம் - இளஞ்சுடர் எஸ். திவ்யசாகரசர்மா
முகர்சிங் - கலாவித்தகர் பரிபூரணஆனந்தம் விக்னேஸ்வரன்

நாட்டிய அர்ப்பணம்
நெறியாள்கை - நுண்கலைமாணி ஸ்ரீமதி. பாலினி கண்ணதாஸ்


கிழவன்காடு கலாமன்றம் வழங்கும்
" சிதம்பர ஜோதி "
உயர்விருது பெறுவோர் - 2022
நாகமுத்து ஐயர் ஞானசம்பந்த குருக்கள்
( பிரதமகுரு, மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் தேவஸ்தானம், காரைநகர் )

குறிப்பு : நிகழ்வு சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடைபெறும். நிகழ்விற்கான இலவச போக்குவரத்துச் சேவை கலாமன்ற யாழ். கிளையிலிருந்து பி.ப. 2.00 மணிக்கு ஆரம்பமாகும். ( இல. 428, கே.கே.எஸ் வீதி, வண்ணை சிவன்கோவில் அருகாமை )

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கிழவன்காடு கலாமன்றம் - காரைநகர்



வேலை வாய்ப்பு

யாழ். நகர மத்தியில் உள்ள பிரபல வைத்தியசாலையில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றன.
- வரவேற்பாளர்
- மருந்தாளர்
- காசாளர்
- தாதி உதவியாளர்



யாழ். நகர பகுதிக்கு உட்பட்ட உயர் தரம் பூர்த்தி செய்தவர்கள் விரும்பத்தக்கது.
இதற்கான நேரடி நேர்காணல் வரும் செவ்வாய்க்கிழமை காலை 09.00 மணி தொடக்கம் மதியம் 12.00 மணி வரை இடம்பெறும். (அ-3660)

அத்தியாவசிய தொடர்புகளுக்கு மட்டும்
077 120 3763

இடம்- இல.130, 1ம் குறுக்கு தெரு, யாழ்ப்பாணம்.


## பயங்கரவாத சட்டத்திற்கு எதிராக வட்டக்கச்சியில் கையெழுத்து போராட்டம்

(முறிகண்டி)

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தை இரத்து செய்யக் கோரி கையெழுத்துப் போராட்டம் நேற்று வட்டக்கச்சியில் நடைபெற்றது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்து செய்யக் கோரி கையெழுத்துப் போராட்டம் பல பகுதிகளிலும் இடம்பெற்று வரும் நிலையில் வட்டக்கச்சியில் முன்னெடுக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தலைமையில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது. (4-6-100-316)


கண்ணீர் அஞ்சலி

லயன் கலாநிதி
கனகசபை சுந்தரலிங்கம்

தோற்றம் : 30.01.1955 மறைவு : 24.02.2022



நட்புக்கு இலக்கணம் நீ,
நல்ல ஐயப்ப பக்தன் நீ,
பொற்புற வாழ்ந்த புண்ணியன் நீ,
பொதுநலம் கருதிய சேவகன் நீ.
பற்பல பெருமைக்கு உரியவன் நீ.
வலிந்து உதவுவதால் பெரியவன் நீ.
நற்கதி அடைந்தாயே இறைநிழலில்!
நெக்குருகி அஞ்சலிக்கின்றோம்.

அவர்கள் காலமான செய்தி அறிந்து துயரடைவதுடன். அவரை இழந்து தவிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா ஐயப்ப சுவாமி பாதத்தில் சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!

உரிமையாளர் மற்றும் ஊழியர்கள்
[illegible]
A9 வீதி, கிளிநொச்சி.
(C 3868)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



பிறப்பு 1953 - 05 - 10

இறப்பு 2022 - 02 - 25

### கந்தப்பு இளங்கோ

**(பட்டயக் கணக்காளர்)**

துன்னாலை மேற்கு, கரவெட்டியை பூர்வீக இடமாகக் கொண்ட பட்டயக் கணக்காளர் கந்தப்பு இளங்கோ அவர்கள் நேற்று முன்தினம் (25.02.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - செல்வரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் மற்றும் கலைமகளின் அன்புக் கணவரும் விபூஷனாவின் (பொறியியலாளர்) பாசமிகு தந்தையும் கமலாம்பிகை (கொழும்பு), நீலாம்பிகை (கரவெட்டி), விமலாம்பிகை (கனடா), பாரிமனோகரன் (கொழும்பு), ஞானாம்பிகை (கனடா), இளவழகன் (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் விவேகானந்தன் (கனடா), ரகுநாதன் (கனடா), சரஸ்வதிதேவி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமைக் கிரியைகள் நேற்று (26.02.2022) சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் வேலுண்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(C-3866)


## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியில் உள்ள Hotel, திருமண மண்டபம் ஒன்றிற்கு கீழ்வரும் ஊழியர்கள் உடன் தேவை.

- வரவேற்பாளர்கள்(ஆண்/ பெண்)
- வெயிற்றர்
- Room boy
- முகாமையாளர் (Manager)

தங்குமிடம், உணவு வழங்கப்படும்.

**077 766 0396**

(10402)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532


## கண்ணீர் அஞ்சலி



கனகரத்தினம் கனகராஜா (கனெக்ஸ் )
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி கனகரத்தினம் ஆனந்தமலர்

அவர்கள் அமரத்துவம் அடைந்த செய்தி அறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தோற்றம் - 1953.12.09 மறைவு - 2022.02.25

**வடமராட்சி ஊடகத்துறையினர்.**

(C-3865)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி


அமரர்

### நாகநாதர் சிவஞானம்

மலர்வு : 07.06.1943 உதிர்வு : 10.03.2021

**திதி : 27.02.2022**

**துவாதசி**



ஓர் ஆண்டு பூர்த்தியாகியதே
எங்களை விட்டு நீங்கள் பிரிந்து,
எங்கள் வாழ்வினில் வசந்தமான
வாழ்வுதனை வாழ வைத்த தெய்வமே!
"வாழ்க்கை வாழ்வதற்கே" என்ற
வாசகத்தினை வழிகாட்டியாக்கிய
நூலாசிரியர் நீவிர் அப்பா
நேரில் கண்ட தெய்வமே!
நேர்கொண்டு வாழ வைத்தீர்களப்பா
மறைந்தும் மறையாத - உங்கள்
நினைவுகளுடனே வாழும்

(C-3864)

**உங்கள் அன்புச் செல்வங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயோத்தியில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ள ஸ்ரீ இராமர் பாதம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது

(கொழும்பு)

ஸ்ரீ இராமர் ஜென்ம பூமியான இந்தியாவின் அயோத்தியில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ள ஸ்ரீ ராமர் பாதம் நேற்று முன்தினம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டது.

ஸ்ரீ இராமர் இலங்கையில் காற்தடம் பதித்த இடங்கள் தோறும் கொண்டு செல்லப்படவுள்ள இந்த புனித வெள்ளிப் பாதங்கள் அயோத்தியில் நிர்மாணிக்கப்படவுள்ள கோவிலில் பிரதிஷ்டை செய்யப்படவுள்ளன.

பாரதத்தை சேர்ந்த சுமார் 40 பேர் கொண்ட குழுவினர் அயோத்தியில் இருந்து ஸ்ரீ இராமரின் புனித பாதங்களை இலங்கைக்கு கொண்டு வந்தனர். (நி)

# நீடிக்கும் டொலர் தட்டுப்பாடு 2,500 கொள்கலன்கள் துறைமுகத்தில்

(கொழும்பு)

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய சுமார் 2,500 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

டொலர் தட்டுப்பாடு காரணமாக அரிசி, பருப்பு, சீனி, உலர்ந்த மிளகாய் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் அடங்கிய கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக அச்சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (நி)


## 45 ஆம் நாள் நினைவு தின நிகழ்வு அழைப்பும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர்.செல்வன்.விக்னேஸ்வரன் வினோஜன்

அன்னை மடியில் 08 . 12 . 2001

ஆண்டவன் மடியில் 16 . 01 . 2022

கடந்த 16.01.2022 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தின் ஒளி விளக்கு அமரர்.செல்வன். விக்னேஸ்வரன் வினோஜன் யாழ்/மத்திய கல்லூரி மாணவன் (உயர்தரம் கலைப்பிரிவு-2022)

எமது அன்புச் செல்வம் வினோஜனின் மறைவைக் கேள்வியுற்று எமது இல்லம் நோக்கி விரைந்தோடி வந்து யாழ்.வைத்தியசாலையில் இரண்டு நாளாக தம் உடல் வலி பாராது திக்கற்று நிலைகுலைந்து சோகத்தில் மூழ்கிப்போன எமக்கு தோள் கொடுத்து உதவி ஆறுதல் அளித்த அனைத்து அன்புள்ளங்களுக்கும் முதற்கண் எமது ஆழமான நன்றிகள். எமது மகன் எம்மை விட்டுப் பிரிந்த செய்தியினை கேள்வியுற்றதும் நேரிலும் தொலைபேசியூடாகவும் சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் எம் சோகத்தில் பங்கேற்றவர்களுக்கும் எமது நன்றிகள். இறுதிச் சடங்கில் நேரடியாக எம் இல்லம் வந்து அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர்கள், நண்பர்கள், யாழ்.மத்திய கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் D.C.M கல்வி நிலைய மாணவ, மாணவிகள் , அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், யாழ்.பல்கலைக்கழக சமூகத்தினர் அனைவருக்கும் எமது நன்றிகள். மகனின் பூதவுடலை பார்வையிட சமூக வலைத்தளங்களூடாக பங்கேற்றவர்களுக்கும் புலம்பெயர் தேசத்திலிருந்து உடனோடி வந்தவர்களுக்கும் மலர் வளையங்கள், பூமாலைகள் சாத்திய அன்புள்ளங்களுக்கும் பதாகைகள் கட்டியவர்களுக்கும் பத்திரிகைகளிலும் சமூக வலைத்தளங்களிலும் துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் இறுதிச் செய்தியைப் பகிர்ந்து கொண்ட அனைத்து அன்புள்ளங்களுக்கும் காலமறிந்து எமக்கு உணவளித்த அன்பர்களுக்கும் எமது நன்றிகள்.

இவ் அழைப்பை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொண்டு அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அந்தியேட்டிக் கிரியைகள்
காலம்: 27.02.2022 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: காலை 7.00-10.00 மணி
இடம்: கீரிமலை புனித தீர்த்தக்கரை

நினைவுதின நிகழ்வு
காலம்: 01.03.2022 செவ்வாய்க்கிழமை
நேரம்: மு.ப. 10.00
இடம்: அன்னாரின் இல்லம்

நாவற்குழி மேற்கு,
நாவற்குழி,
ஐயனார் கோவிலுக்கு முன்பாக.

T.P: 077 962 8431
076 167 3361

தகவல்:-
விக்னேஸ்வரன் (அப்பா),
தேவிகா (அம்மா),
பிரவின் (தம்பி).

(10370)


# இராசிபலன்

27.02.2022
மாசி 15, ஞாயிற்றுக்கிழமை
ஏகாதசி காலை 6.54 மணிவரை
துவாதசி பின்னிரவு 4.47 மணிவரை

பூராடம் முற்பகல் 7.37 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 6.13 மணிவரை
சுபநேரம் - 9.29- 10.59 மணிவரை
இராகுகாலம் -4.59-6.29 மணிவரை

ஏகாதசி விரதம்
சந்திராஷ்டமம்- மிருகசீரிடம்

வளவன்

**மேஷம்** தூர தேசத்திலிருந்து மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் பெருகும் நாள், பெரிய மனிதர்களின் சந்திப்பால் சிந்தை மகிழ்வீர்கள், எடுத்த கருமங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**மிதுனம்** எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், பிரயாணபயமுண்டு.

**கடகம்** வராத உறவினர்கள் உங்கள் வீட்டுக்கு வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**சிம்மம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கன்னி** உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**துலாம்** நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.

**விருச்சிகம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**தனுசு** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**மகரம்** உடல் நலன் சீராகும், வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள், வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் செல்லும், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்** சிறிய வேலையொன்றுக்காக சற்று அலைய நேரிடலாம், பயணங்களால் பலனுண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**மீனம்** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் பெருக வழியமைத்துக் கொள்வீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆளுநரின் உறுதிமொழியை அடுத்து அரசியல் கைதிகளின் போராட்டம் தற்காலிகமாக கைவிடப்பட்டது

**(யாழ்ப்பாணம்)**

**யாழ்ப்பாண சிறைச்சாலையில் உண்ணா விரதத்தினை மேற்கொண்ட 3 கைதிகளும் நேற்று வடக்கு மாகாண ஆளுநரின் உறுதிமொழியை அடுத்து தமது உண்ணாவிரத போராட்டத்தை கைவிட்டுள்ளதாக கைதிகளின் உறவினர்கள் தெரிவித்தனர்.**

யாழ்ப்பாண சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடுப்பு பிரிவின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 3 தமிழ் கைதிகள், கடந்த மூன்று நாட்களாக உண்ணாவிரதப் போராட்டத்தினை முன்னெடுத்து வந்திருத்த நிலையில் அதற்கு ஆதரவாக அவர்களுடைய உறவினர்களால் வடக்கு மாகாண ஆளுநர் செயலக முன்றலில் உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் வடக்கு மாகாண ஆளுநருடன் இடம் பெற்ற சந்திப்பின்போது வடக்கு மாகாண ஆளுநரின் உறுதிமொழியை அடுத்து கைதிகளின் உறவினர்கள் தமது உண்ணாவிரத போராட்டத்தை கைவிட்டு இருந்த நிலையில் நேற்று வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் யாழ். சிறைக்கு வருகை தந்து ஆளுநரின் உறுதி மொழியை உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபடும் கைதிகளிடம் விளங்கப் படுத்தியதையடுத்து சிறைச்சாலையில் கடந்த மூன்று நாட்களாக உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வந்த மூன்று கைதிகளும் தற்காலிகமாக தனது உண்ணாவிரதப்போராட்டத்தை கைவிடுவதாக உறவினர்கள்தெரிவித்தனர்.(4-6-33-104)



பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் MJF அறக்கட்டளை நிதியம் மற்றும் Lan& Barbara Karan நிதியத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடி நோயாளர் கட்டடத்தொகுதி திறப்பு விழா நேற்று சனிக்கிழமை வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது. (படம்:-மகாலிங்கம்)

## கலைப்பீடத்தின் 'மானுடம் 2022' சர்வதேச ஆய்வு மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடம் 'மானுடம் 2022' என்னும் பெயரிலான சர்வதேச ஆய்வு மாநாடொன்றை எதிர்வரும் ஜூலை மாதம் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது.

'மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் நூற்றாண்டு தொடர்ச்சிகள், விலகல்கள், செல்நெறிகள்' என்னும் கருப்பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரின் ஒரு பகுதியாகக் கலைப்பீடம் இந்த மாநாட்டை ஒழுங்கமைத்துள்ளது.

முழுமையான ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியாக மார்ச்-29 ஆம் திகதி என அறிவிக்கப் பட்டுள்ளது. (4-6-18)

## நூல் வெளியீடும் திருக்கேதீச்சர யாத்திரையும்

(குப்பிழான்)

அகில இலங்கை சைவமகா சபையின் சிறுவர்களுக்கான திருமந்திரத்தையும் சிவ புராணத்தையும் அடியொற்றிய "அன்பே சிவம" குறுங்கதை நூல் வெளியீடும், தமிழ்ச் சைவப் பேரவையுடன் இணைந்த திருக்கேதீச்சர யாத்திரையும் நாளை மறுதினம் 1 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம் பெறவுள்ளது.

அன்றையதினம் காலை-6.30 மணிக்குச் சுழிபுரத்திலிருந்து போக்குவரத்து வசதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பேருந்து தரிப்பு நிலையத்திலிருந்து காலை-7 மணிக்குப் பேருந்து மாங்குளம் நோக்கி புறப்படும். மாங்குளம் சைவமகா சபையின் அலுவலக மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நூல் வெளியீடு மற்றும் அறநெறி மாணவர்களின் நிகழ்வுகள் நடைபெறும்.

தொடர்ந்து மதிய உணவு வழங்கப்பட்டபின் மதியம் 1 மணிக்குத் திருக்கேதீச்சரம் நோக்கிய யாத்திரை தொடரும் என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (4-6-18)



யாழ்ப்பாணம் - நல்லூர் இராசதானியின் தோரண வாசல் புனருத்தாரண பணிகளின் பின்னர் எவ்வாறு காட்சி அளிக்கும் என்பது தொடர்பிலான மாதிரி ஒளிப்படங்களை யாழ். மாநகர சபை முதல்வரின் ஊடக பிரிவு வெளியிட்வுள்ளது. யாழ்ப்பாணம் - நல்லூர் இராசதானியின் தோரணவாசல் புனருத்தாரணம் செய்வதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:-சிவசாந்தன், ரவிசாந்)

## நூலக பேருந்து வழங்கி வைப்பு



(அராலி)

யாழ். புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயத்துக்கு நூலக பேருந்து வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் நூலக பேருந்தொன்று வழங்கி வைக்கப்பட்டது.

இலங்கை போக்குவரத்து சபையின் பழுதடைந்த பேருந்துகளை திருத்தி பாடசாலை மாணவர்களின் நலன் கருதி நூலகமாக மாற்றப்பட்டு பாடசாலையிடம் கையளிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் இந்த பாடசாலைக்கு மாத்திரமே நூலகப் பேருந்து வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இத் திட்டம் இலங்கையின் 25 மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது. (4-6-104)

## ஒன்று கூடல் நிகழ்வும் நிர்வாக உறுப்பினர் தெரிவும்



(அராலி)

வலிகாமம் வடக்கு கலைஞர்களின் ஒன்றுகூடல் நிகழ்வும் புதிய நிர்வாக உறுப்பினர் தெரிவும் வலி. வடக்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இந் நிகழ்வில் அப்பிரதேசத்தில் உள்ள கலைஞர்கள் பங்குபற்றி தமது புதிய நிர்வாக உறுப்பினர்களை தெரிவு செய்தனர்.

அத்துடன் எமது அலுவலகத்தில் கலாசார உத்தியோகத்தராக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலரின் சேவைகளை பாராட்டி கலைஞர்கள் கௌரவித்தனர்.(4-6-104)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

வண்ணார்பண்ணை சிவா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் வருடாந்த மாபெரும் இரத்ததான முகாம் நிகழ்வு இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள மேற்படி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

குறித்த இரத்ததான முகாம் நிகழ்வில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு இரத்ததான முகாம் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-6-18)

## உரிமை கோரவும்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் வழ.இல.AR/350/21 உடைய துவிச்சக்கர வண்டி, வழ.இல.AR/353/21, வாகன இல. NPJ18558 மற்றும் வழ. இல.AR/256/19 வாகன இல.NPBBZ7615 உடைய மோட்டார் சைக்கிள் என்பன பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த வாகனங்கள் தொடர்பாக எதிர்வரும் 16.03.2022 இற்கு முன்னர் உரிமையாளர் யாரேனும் இருப்பின் உரிய ஆவணங்களுடன் நீதிமன்றில் தோன்றி விண்ணப்பம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர். இல்லை எனில் அரசுடமையாக்கப்படும் என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார்.(4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உக்ரைன் தலைநகரில் குண்டு மழை!

## ஜனாதிபதி மாளிகையை விட்டு வெளியேறினார் ஜெலன்ஸ்கி



(கீவ்)

தலைநகர் கீவ்வை கைப்பற்றும் நோக்கத்தில் ரஷ்ய படைகள் முற்றுகையிட்டு கடும் தாக்குதல் நடத்தி வருவதால் உக்ரைன் முழுவதும் இது வரை இல்லாத அளவுக்கு மக்கள் மத்தியில் பதட்டமும், பீதியும் ஏற்பட்டு உள்ளது.

கீவ் நகரின் குடியிருப்பு பகுதிகளையும் ரஷ்ய படைகள் தாக்க தொடங்கி உள்ளன.

இதனால் பல்லாயிரக்கணக்கான மக்கள் கீவ் நகரில் இருந்து வெளியேற தொடங்கி உள்ளனர். நேற்று முன்தினம் இரவு தாக்குதல் அச்சத்தில் ஆயிரக்கணக்கானோர் மெட்ரோ ரெயில் நிலையங்களில் தஞ்சம் அடைந்தனர்.

நேற்று அதிகாலை கீவ் நகரில் உள்ள மற்றொரு விமான தளத்தை கைப்பற்ற ரஷ்ய படைகள் கடும் தாக்குதலை நடத்தின. இந்த தாக்குதலை வெற்றிகரமாக முறியடித்து இருப்பதாக உக்ரேயன் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இதற்கிடையே தலைநகர் கீவ் முழுவதும் இணைய தள சேவையை ரஷ்யா வெற்றிகரமாக முடக்கி உள்ளது. இதனால் தகவல் தொடர்பு மேற்கொள்ள முடியாமல் உக்ரேய்ன் இராணுவம் முடங்கி உள்ளது. இதை பயன்படுத்தி ரஷ்ய வீரர்கள் தாக்குதலை மேலும் அதிகப்படுத்தி உள்ளனர்.

உக்ரேய்ன் ஜனாதிபதி தனது மாளிகையை விட்டு வெளியேறி ரகசிய இடத்தில் பதுங்கி உள்ளார். அங்கிருந்தபடி ரஷ்ய தாக்குதல் தொடர்பான தகவல்களையும் மற்ற உத்தரவுகளையும் வெளியிட்டவாறு உள்ளார்.

இதன் மூலம் தலைநகர் கீவ் கொஞ்சம் கொஞ்சமாக ரஷ்யா வசம் போய் கொண்டிருப்பது உறுதியாகி இருக்கிறது.

எனவே ஓரிரு நாட்களில் ரஷ்யா-உக்ரேய்ன் போரில் திருப்புமுனை ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# அணு ஆயுதத்தை கையில் எடுப்பேன் உலக நாடுகளை மிரட்டிய புடின்

(மொஸ்கோ)

உக்ரேய்ன் ஆக்கிரமிப்பை தடுத்தால் அணு ஆயுதத்தை ரஷ்யா கையில் எடுக்கும் என்கிற வகையில் ரஷ்ய ஜனாதிபதி புடின் மிரட்டி உள்ளார்.

இராணுவ விவகாரங்களை பொறுத்தமட்டில், சோவியத் யூனியன் கலைக்கப்பட்ட பின்னரும், அதன் திறன்களில் கணிசமான பகுதிகளை இழந்தபிறகும், இன்றைய ரஷ்யா மிகவும் பலம்வாய்ந்த அணு சக்தி நாடுகளில் ஒன்றாக உள்ளது.

இந்த சூழலில், உக்ரேய்ன் ஆக்கிரமிப்பை தடுக்கும் விதத்தில் எந்தவொரு நாடும் நேரடியாக நம் நாட்டைத் தாக்கினால் தோல்வியையும், பயங்கரமான விளைவுகளையும் (அணு ஆயுத தாக்குதல்) சந்திக்க நேரிடும். இவ்வாறு அவர் தெரிவித்தார். (நி)

# தூதரகத்துக்கு நேரில் சென்று

## போரை நிறுத்துமாறு போப் வேண்டுகோள்

(வத்திக்கான்)

உக்ரேய்ன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போரை கைவிடுமாறு உலக நாடுகள் வேண்டுகோள் விடுத்து வருகின்றன.

ஆனால் அதை ரஷ்யா ஏற்கவில்லை.

இந்த நிலையில் போப் ஆண்டவர் பிரான்சிஸ் ரோமில் உள்ள ரஷ்ய தூதரகத்துக்கு நேரில் சென்று அப்போது அங்கிருந்த தூதரக அதிகாரிகளை சந்தித்து உக்ரேய்ன் மீது தொடுக்கப்பட்டுள்ள போர் குறித்து தனது கவலையை தெரிவித்தார்.

போரை உடனே நிறுத்துமாறு அவர் தூதரக அதிகாரிகளிடம் வேண்டு கோள் விடுத்தார்.

போப் ஆண்டவரின் இந்த போர் நிறுத்த முயற்சி நெகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: ரேவதி 3
கி.பா: 32 சூரி 8 செவ் 7 இல்
உயரம் 6'
தகைமை/தொழில்:O/L NVQ (Level 4) கமம் பல ஏக்கர் தென்னந்தோட்டக் காணிகளுக்கு உரிமையாளர்
எதிர்பார்ப்பு: மணமகன் வீட்டில் வசிக்கும் பெண்ணை எதிர்பார்க்கின்றோம்
தொ.இ: B/12349

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: சூரி 9 செவ் 11 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: O/L சொந்த வாகனம்
எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண்
தொ.இ: B/12352

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 15 சூரி 5 செவ் 1 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: சிவில் பொறியியலாளர்
எதிர்பார்ப்பு: தகுந்த அரச தொழில்
தொ.இ: B/12353

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூசம் 2
கி.பா: சூரி. செவ் 10 இல்
உயரம்: 162 cm
தகைமை/தொழில்: LLB Foollowing வியாபாரம் விவசாயம்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: சூரி 3 செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: வங்கியாளர்
எதிர்பார்ப்பு: உயர் பதவி
தொ.இ:G/9184

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 4
கி.பா: 6 சூரி 11 செவ் 12 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: MBBS Doctor
எதிர்பார்ப்பு:Doctor, Engineer
தொ.இ:G/9189

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: சூரி 8 செவ் 11 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L தனியார் தொழில் (நிரந்தரம்)
எதிர்பார்ப்பு: அரச. தனியார் உத்தியோகம்
தொ.இ:G/9208

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: சூரி 3 செவ் 11 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:ACCA Ass. Accountant
எதிர்பார்ப்பு: அமெரிக்கா. லண்டன். கனடா. அவுஸ்திரேலியா மட்டும்

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொ[illegible]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அற[illegible]


# ஐ. நா. வின் தீர்மானத்தை முறியடித்தது ரஷ்யா

(மொஸ்கோ)

உக்ரேய்ன் மீதான தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்து ஐ.நா.வில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி ரஷ்யா முறியடித்தது.

உக்ரேய்ன் மீது ரஷ்யா நடத்தி வரும் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்க ஐ.நா. சபையில் நேற்று தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில், 11 நாடுகள் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தன. இந்தியா, சீனா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 3 நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

11 நாடுகள் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களித்தபோதும் ரஷ்யா தனக்கு உள்ள வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி தீர்மானத்தை முறியடித்தது. இதனால், உக்ரேய்ன் மீதான ரஷ்யாவின் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கும் ஐ.நா. சபையின் தீர்மானம் தோல்வியில் முடிந்தது. (நி)

**தீவிரமடையும் போர்ச்சூழல்**

# கடும் நெருக்கடிக்குள் உலக பொருளாதாரம்

## உலக வங்கி எச்சரிக்கை

(வோஷிங்டன்)

ரஷ்ய - உக்ரேய்ன் போர் பதற்றத்தின் ஊடாக பாரிய பொருளாதார பாதிப்பு ஏற்படக்கூடும் என உலக வங்கி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான எச்சரிக்கையை உலக வங்கியின் தலைவர் டேவிட் மல்பாஸ் விடுத்துள்ளதுடன், இந்த மோதல் மற்றும் உயிரிழப்புகள் தொடர்பில் கவலை கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் இது குறித்து சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் க்றிஸ்டலினா ஜோர்ஜிவே கூறுகையில், ரஷ்ய - உக்ரேய்ன் யுத்தம் காரணமாக ஐரோப்பிய வலயத்தில் மட்டுமன்றி, உலகம் முழுவதும் பொருளாதார பாதிப்பு அதிகரிக்கும் என சுட்டிக் காட்டியுள்ளார். அதேவேளை உக்ரேய்னுக்காக சர்வதேச நாணய நிதியம் வழங்கும் 2.2 பில்லியன் டொலர் கடன் திட்டம் [illegible]தும் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.(நி)


## மணமகன் தேவை

பிறப்பு:- 1989 இந்து
நட்சத்திரம்:- திருவோணம்
கி .பா:- 57 (சூரியன், செவ்-4)
உயரம்:- 5'4"
தகைமை/தொழில்:-பட்டதாரி ஆசிரியர்
எதிர்பார்ப்பு:- உள்நாடு அரச தொழில்
தொடர்புகளுக்கு:-
077 271 8498
(10347)

## மணமகள் தேவை

1987- 12ம் மாதம் இந்து கௌரவ குடும்பம். திருவோணம் 7ல் செவ்வாய் கி.பா 25 பிரதி வங்கி முகாமையாளர் தகுந்த வரணை தேடுகின்றோம். (சி-3850)
077 224 9523

## மணமகன் தேவை

தகைமை- BSc (Hons) computer Science
வேலை- Associate software Engineer
எதிர்பார்ப்பு - பட்டதாரி (Graduate)
விரும்பத்தக்கது- காரைநகர்
நட்சத்திரம் -சதயம்
பிறந்த திகதி - 1996.01.23
கிரகபாவம் - 18
சூரியன் செவ்வாய் -10 ம் இடம்
(10392)
076 732 1180


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உக்ரேய்ன் - ரஷ்ய மோதலால் இலங்கைக்கு கடும் பாதிப்பு

## கொழும்பு பல்கலைக்கழகம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**உக்ரேய்ன் - ரஷ்ய மோதல் இலங்கையின் பொருளாதாரத்தை கடுமையாக பாதிக்கும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல் பேராசிரியர் கோபாலப்பிள்ளை அமிர்தலிங்கம் சுட்டிக்காட்டியுள்ளார்.**

உக்ரேய்ன் - ரஷ்ய மோதலால் இலங்கை எதிர்நோக்கப் போகும் விளைவுகள் குறித்து ஊடகம் ஒன்றிற்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உக்ரேய்னில் ரஷ்யாவின் பாரிய தாக்குதலை அடுத்து உக்ரேய்னுக்கான அனைத்து சர்வதேச விமானங்களும் நிறுத்தப்பட்டுள்ளன.

அதன் காரணமாக தற்போது இலங்கைக்கு வந்துள்ள உக்ரேய்ன் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

இலங்கை, உக்ரேய்ன் உட்பட ரஷ்ய பிராந்தியத்தில் இருந்து அதிகமான சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதுடன், இலங்கையின் தேயிலை கொள்வனவாளர்களில் உக்ரேய்னும் ரஷ்யாவும் முன்னணியில் உள்ளனர். இதனால் இலங்கையின் பொருளாதாரம் கடுமையாக பாதிக்கும் என அவர் தெரிவித்தார். (ஞி)

# சொகுசு பஸ் - லொறி மோதி விபத்து ஐந்து பேர் மருத்துவமனையில்



(திருமலை)

திருகோணமலை கொழும்பு பிரதான வீதியில் தனியார் அதிசொகுசு பேருந்து லொறியொன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று அதிகாலை 2.30 மணியளவில் கலேவெலவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கலேவெல பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஞி)

# போதைப் பொருட்களுடன் சிவனொளிபாதமலைக்கு சென்ற 193 பேர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

போதைப் பொருட்களுடன் சிவனொளிபாதமலை யாத்திரை சென்ற 193 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிவனொளிபாதமலைக்கு போதைப் பொருட்கள் கொண்டு செல்வதனை தடுப்பதற்கான சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து கேரளக் கஞ்சா, போதை மாத்திரைகள், தடை செய்யப்பட்ட சிகரெட்டுக்கள், மதன மோதகம், ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. (ஞி)

# உக்ரேய்னில் உள்ள இலங்கையர்களை போலந்து செல்லுமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

உக்ரேய்னில் இருந்து நாடு திரும்ப விருப்பம் வெளியிட்டுள்ள இலங்கையர்கள் பாதுகாப்பாக போலந்து செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக துருக்கிக்கான இலங்கை தூதுவர் ஆர்.ஹசன் தெரிவித்தார்.

உக்ரேய்னில் தற்போது 59 இலங்கையர்கள் உள்ளனர். அவர்களில் 20 பேர் உக்ரேய்ன் தலைநகர் கீவில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஞி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 150 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | .125 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 350 | 300 | 350 | 400 |
| தக்காளி | 230 | 220 | 240 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 90 | 60 |
| கோவா | 100 | 120 | 160 | 120 |
| கரட் | 350 | 450 | 360 | 400 |
| பூசணி | 140 | 160 | 150 | 160 |
| புடோல் | 200 | 200 | 140 | 200 |
| வாழைக்காய் | 50 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 200-300 | 200 |
| பெரிய வெங்காயம் | 160 | 120 | 140 | 160 |
| பாகற்காய் | 250 | 300 | 300 | 300 |
| வெண்டிக்காய் | 180 | 120 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 400 | 150 | 240 | 300 |
| லீக்ஸ் | 120 | 120 | 200 | 350 |
| பீற்றூட் | 100 | 200 | 180 | 240 |
| கறிமிளகாய் | 400 | 350 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | 1000 | 1200 |
| போஞ்சி | 180 | 160 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 200 | 120 | 120 | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 120 | 150 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 75 | 60 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 | 150 |
| வெங்காயப்பூ | 140 | 100 | 160 | 240 |
| முள்ளங்கி | 60 | 80 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 60 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 20 | 40 |
| ஈரப்பலா | -- | 120 | 80 | -- |

# கொரோனா அபாயம் இன்னும் குறைவடையவில்லை

## சுகாதார தரப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

கொரோனாத் தொற்று பரவலின் அபாயம் இன்னும் குறைவடையவில்லை என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும் என சுகாதார தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் வைரஸ் நோய்கள் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் நதீக ஜானகே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஒமிக்ரோன் மாறுபாடு தொடர்ந்தும் மரபணு மாற்றங்களுக்கு உட்பட்டு பரவி வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மரபணு மாற்றங்களின் ஊடாக ஒரு முறை தொற்றுக்கு உள்ளான நபருக்கு மீண்டும் ஒமிக்ரோன் வைரஸ் தொற்று ஏற்படும் வாய்ப்பு காணப்படுகிறது.

அத்துடன் கொரோனா தொற்று பரவலின் அபாயம் இன்னும் குறைவடையவில்லை என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும்.

இந்த நிலையில் தற்போதைய நிலைமைக்கமைய சாதாரண நபர் ஒருவருக்கு ஒரு பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படுவது போதுமானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஞி)


# கண்ணீர் அஞ்சலி

அமரர்.திருமதி.இராசரத்தினம் தங்கலட்சுமி

பிறப்பு 26.05.1938 இறப்பு 26.02.2022



எமது பாடசாலை அதிபர்
திரு.இராசரத்தினம் புஷ்பரத்தினம்
அவர்களின் பாசத் தாயார்
திருமதி.இராசரத்தினம் தங்கலட்சுமி
அவர்கள் 26.02.2022 அன்று
இறைவனடி சேர்ந்தமையையிட்டு
பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ஏழாலை மகா வித்தியாலயம், ஏழாலை.

(10388)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வினையும் செய்வானும் அதன் பயனும் சேர்ப்பானும், மெய் வகையால் நான்காகும் விதித்த பொருள் ~ சேக்கிழார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www:valampurii.lk

## தனித்துவிடப்பட்ட உக்ரைன் வந்துறுத்தும் ஊழ்வினை

ஜன்ஸ்ரின் என்ற விஞ்ஞானியிடம் மூன்றாம் உலகப் போர் நடக்குமா? என்று சிலர் கேள்வி எழுப்பினர்.

அதற்கு ஜன்ஸ்ரின் மூன்றாம் உலகப் போர் நடக்குமா? இல்லையா? என்பது பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

ஆனால் நான்காம் உலகப் போரில் கற்களும் பொல்லுகளும் தடிகளுமே பயன்படுத்தப்படும் என்றார்.

ஜன்ஸ்ரினின் மேற்படி பதில் மூன்றாம் உலகப் போர் நடந்தால், அதன் அழிவு எவ்வாறாக இருக்கும் என்று சுட்டுவதாக அமைகிறது.

ஆம், மூன்றாம் உலகப் போர் நடைபெற்றால், ஆதிகால வாழ்க்கை நிலைதான் ஏற்படும் என்பது, குறித்த பதிலின் மூலம் மறைமுகமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

இஃது ஒருபுறமிருக்க, உக்ரைன் நாட்டில் நடைபெறும் யுத்தம் உலக மக்களை நடுங்க வைத்துள்ளது.

எங்கே? உக்ரைன் மீது ரஷ்யா நடத்துகின்ற யுத்தம் மூன்றாம் உலகப் போராக மாறி மக்கள் சமூகத்தைக் கொன்று குவித்து விடுமோ என்ற ஏக்கம் உலகம் முழுமைக்கும் பொதுமையாகவுள்ளது.

ஆம், உக்ரைனில் நடைபெறும் போரின் கொடுமை எத்துணை பயங்கரமானது – எத்துணை துன்பமானது என்பதை உலக மக் கள் உணர்ந்துள்ளனர்.

இஃது உக்ரைனில் மட்டுமல்ல. உலகிலுள்ள எந்த நாட்டில் யுத்தம் நடந்தாலும் இதே அழிவுகளும் மனிதப் பேரவலங்களும் நடந்தே ஆகும்.

உண்மை, 2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் இலங்கைப் படையினர் நடத்திய கொடும்போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர்.

கூடவே போரின் ஈற்றில் படையினரிடம் சரணடைந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது இன்னும் மர்மமாகவே உள்ளது.

எனினும் உலக நாடுகள் இது விடயத்தில் கருசனை காட்டவில்லை.

உள்நாட்டு யுத்தம் என்பதற்குள் ஈழத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பேரவலம் மறந்தும் மறைக்கப்பட்டும் உள்ளது.

அதிலும் கொடுமை; உள்நாட்டு யுத்தத்தில் தலையிட முடியாதென்பதுபோல நடந்து கொண்ட உலக வல்லரசுகள், இலங்கை அரசுக்கு போராயுதங்களையும் யுத்த விமானங்களையும் கப்பல்களையும் வழங்கியதுதான்.

அந்தோ! பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டதற்கு இன்று வரை நீதியும் கிடைக்கவில்லை. சிங்களப் பேரினவாதிகளின் இனவன்மமும் தீரவில்லை.

இந்தநிலையில் அதோ! ரஷ்யாவின் தாக்குதலால் திணறி நிற்கின்றது உக்ரைன்.

இந்த இக்கட்டான நேரத்தில் உக்ரைன் நாட்டு ஜனாதிபதி "நாங்கள் தனித்துவிடப்பட்டுள்ளோம்" எனக் கூறியுள்ளார்.

ஆம், உக்ரைன் நாட்டுப் போர் விமானங்களும் உக்ரைன் நாட்டு யுத்த விமான ஓட்டிகளும் தமிழர் தலைகளில் குண்டுகளைப் போட்டபோது தமிழர்களும் தனித்துவிடப்பட்டிருந்தனர் என்ற உண்மையை இயற்கை உக்ரைன் நாட்டுக்கு உணர்த்தி நிற்கிறது.

ஓ! இதைத்தான் வள்ளுவர் ***ஊழிற் பெருவலி*** என்று கூறினார் எனில், அந்த ஊழ்வினை உக்ரைனைக் கடந்து இலங்கைக்கும் வரவே செய்யும்.

ஊழ்வினை வந்துறுத்தப் போகிறதென்பதன் அறிகுறிதான் இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பெருமந்தமோ என்று நினைப்பதிலும் தர்மம் இருக்கவே செய்கிறது.

# வெற்றிகரமான தடுப்பூசி ஏற்றலே கோவிட் பேரழிவை தடுத்தது

## ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட வெற்றிகரமான தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தினால் தொற்றுப் பரவல் காரணமாக நாட்டுக்கு ஏற்படவிருந்த பாரிய அழிவு நிலைமையைக் கட்டுப்படுத்த முடிந்தது.

தடுப்பூசி பெற்றுக்கொள்ளக்கூடிய மொத்த சனத்தொகையில் 95 சதவீதமானோர் முதற்கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளதோடு, 80 சதவீதமானோர் முழுமையான தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகள் தலைமையகத்தை மையப்படுத்தி காணொளி தொழில்நுட்பத்தில் இடம்பெற்ற உலகளாவிய தடுப்பூசி ஏற்றலை விரைவுபடுத்துவதற்கான உயர் மட்ட விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம)

# மாகாண சபைத் தேர்தலை பழைய முறையில் நடத்த வேண்டும்

## அமைச்சர் தினேஷ் குணவர்தன

(கொழும்பு)

புதிய தேர்தல் முறைமை உருவாக்கப்படும் வரை பழைய முறைமையில் மாகாண சபைத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டும் என்று அமைச்சர் தினேஷ் குணவர்தன வலியுறுத்தியுள்ளார்.

சகல தேர்தல்க்ளின் போதும் தொகுதிவாரியில் 60 வீதம், விகிதாசார முறையில் 40 வீதம் என்ற அடிப்படையில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் கலப்புத் தேர்தல் முறையிலான அறிக்கையை முறைப்படுத்துவதற்கு விசேட தெரிவுக்குழு இணக்கம் தெரிவித்துள்ளது என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கமைய உள்ளூராட்சி சபைகளில் பெரும்பான்மை நிலைப்பாடுகளை உருவாக்குவதற்காக வெற்றிபெற்ற கட்சி அல்லது குழுவுக்கு மேலதிகமாக இரண்டு ஆசனங்களைப் பெற்றுக்கொடுக்கவும் பரிந்துரை முன்வைக்க கொள்கை அடிப்படையில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. (ம)

சிவராத்திரியை முன்னிட்டு

# தெரிவு செய்யப்பட்ட சிவாலயங்களுக்கு நிதியுதவி

(கொழும்பு)

மகா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு, ஈழத்தின் பஞ்ச ஈஸ்வரங்கள் உட்பட நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட சிவாலயங்களுக்கு நிதியுதவி வழங்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக பிரதமர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைவாக, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்த நிதியுதவி வழங்கும் செயற்றிட்டம், தெரிவு செய்யப்பட்ட ஆலயங்களின் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளது.

இளம் இந்து சிறார்களின் ஆன்மீக உணர்வுகளை மேன்மையுறச் செய்து, கலை நிகழ்வுகள் மூலமாக, ஆக்கத்திறன் ஆளுமைகளுக்கு களம் அமைத்துக் கொடுப்பதோடு, மென் மேலும் அவர்களுக்கு ஊக்கம் நல்கும் விதத்தில் பரிசில்கள் வழங்கிப் பாராட்டுதல் என்ற முக்கிய நோக்கத்திற்காக, மகா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாடளாவிய ரீதியில் சிவாலயங்களுக்கு நிதியுதவி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.(ம)

# சிறுவர்களை அச்சுறுத்தும் கொரோனா, டெங்கு

## அவதானமாக இருக்குமாறு ஆலோசனை

(கொழும்பு)

சிறுவர்கள் கொவிட் தொற்றுக்குள்ளாகும் வீதம் அதிகரித்துள்ளதாக சிறுவர் நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் ஹசித லியனாராச்சி தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணி யகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர், ஆரோக்கியமான சிறுவர்களுக்கு கொவிட் தொற்றினால் பாரிய ஆபத்துக்கள் இல்லை என்ற போதிலும், நாட்பட்ட நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு கொவிட் தொற்று ஏற்பட்டால் அது மரணம் வரை செல்லும் என எச்சரித்துள்ளார்.

மேலும் கருத்துரைத்த அவர்,


அத்தோடு சிறார்களுக்கு வழமைக்கு மாறாக ஏதேனும் நோய் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக மருத்துவசாலையில் அனுமதிக்க வேண்டும்.

கொவிட் தொற்றுக்கு அப்பால், அண்மை காலமாக டெங்கு நோயுடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் சிறுவர்களின் எண்ணிக்கையும் அதிகமாகவுள்ளது.

இவர்களில் பெருமளவானோர் டெங்கு மற்றும் கொவிட் ஆகிய இரு நோய்களாலும் பாதிக்கப்பட்டவர்களாகவுள்ளனர். எனவே பெற்றோர் டெங்கு நோய் குறித்தும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்

## பொய்யால் இழக்கும் நன்மைகள்



• வைத்திருக்கும் ஆசீர்வாதங்களை இழக்கின்றோம். உண்மை பேசுவதால் அநேக பிரச்சினைகளை சந்திக்க வேண்டியது இருக்கும். தற்போதைய உலக சூழலில் உண்மை பேசுகிறவர்கள் மிக மிகக் குறைவு. இவர்களுக்கு மத்தியில் ஒருவன் உண்மையை மட்டுமே பேசுவானானால் ,பலரது எதிர்ப்பை சம்பாதிக்கக் கூடும். தண்டனைகளை எதிர் கொள்ள வேண்டியதிருக்கும். ஆனால் தண்டனையை ஏற்றுக் கொண்ட அந்த மனிதனே இறைவனின் ஆசீர்வதங்களைப் பெறுவான். எந்த சூழலிலும் உண்மை பேசுவதால் அவனுக்கென்று அவன் அறியாத இடங்களில் கூட நற்பெயர் உண்டாயிருக்கும். இதை செய்வது இறைவனே.

• உண்மை பேசுவதைத் தவிர மற்ற எதைக் கூறினாலும் அது தீமையை நோக்கியே நம்மை வழி நடத்தும் என்று வேதம் வலியுறுத்துகிறது. பொய் பேசுவதைத் தவிர்க்க வேண்டும் என்று சொல்வது மிகவும் எளிது. ஆனால் அதைக் கைக்கொள்வதும் வாழ்நாள் முழுவதும் பின்பற்றுவதும் கடினமான காரியம். இது போன்ற கடினப்பாதையில் நடக்காமல் ஆசீர்வாதங்களைப் பெறலாம் என்று நினைப்பது அறிவுடைமை அல்ல.(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முல்லைத்தீவு சிராட்டி குளத்தில்

# 2 ஆயிரம் ஹெக்டேயர் நிலப்பரப்பு வன பிரதேசங்களாக அபகரிப்பு!

(கண்டாவளை)

**முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு சிராட்டிகுளம் பகுதியில் சுமார் இரண்டாயிரம் ஹெக்ரேயர் வரையான நிலப்பரப்பு கடந்த இரண்டு நாட்களுக்குள் இரகசியமாக முன்மொழியப்பட்ட வனப் பிரதேசங்களாக வனப்பாதுகாப்பு திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.**




முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு சிராட்டிகுளம் நட்டாங்கண்டல் பிரதேசங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் பொதுமக்களுக்கு சொந்தமான சுமார் இரண்டாயிரம் ஹெக்ரேயர் வரையான நிலப்பரப்பு கடந்த இரண்டு நாட்களுக்குள் இரகசியமான முறையில் முன்மொழியப்பட்ட வனப் பிரதேசங்களாக வனப் பாதுகாப்பு திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டு பெயர்பலகைகள்இடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சிராட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவில் 75 க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 220 பேர் வரையிலும் நட்டாங்கண்டல் கிராம அலுவலர் பிரிவில் 194 குடும்பங்களைச் சேர்ந்த 560 வரையானோர் வசித்து வருகின்றனர்.

குறித்த பிரதேசத்தில் நீண்ட காலமாக பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்பட்டு வந்த காணிகள் கடந்தகால யுத்தம் காரணமாக கைவிடப்பட்ட நிலையில் சிறு சிறு பற்றைக் காடுகளாகவும் காணப்பட்டன. மீள் குடியமர்வின் பின்னர் மக்களால் துப்பரவு செய்யப்பட்டு பயிர் செய்கைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்ற காணிகளும் இவ்வாறு வனவளத்திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

அதாவது சிறாட்டிகுளம் மூப்பன் குளம் பாலம்பிட்டி நட்டாங்கண்டல் ஆகிய பகுதிகளில் கடந்த புதன்கிழமை முதல் வனவளத் திணைக்களத்தினரால் சிராட்டிகுளம் முன்மொழியப்பட்ட வனப் பிரதேசங்கள் என்ற பெயர் பலகைகள் இடப்பட்டுள்ளன.

குறித்த பிரதேசங்களுக்கு பொறுப்பாக இருக்கின்ற கிராம அலுவலர்கள் மற்றும் அரச அதிகாரிகள் கிராம மட்ட அமைப்புக்களோ அல்லது பிரதேச சபை உறுப்பினர்களோ எந்த எதிர்ப்பையும் காட்டவில்லை என்றும் பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (4-6-315)

## மன்னாரில் கையெழுத்து போராட்டம்

(மன்னார்)

நாடளாவிய ரீதியில் நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க கோரி இலங்கை முழுவதும் மேற்கொள்ளப்பட்டுவரும் கையெழுத்து போராட்டம் நேற்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் பேருந்து நிலையத்தில் ஆரம்பமாகி இடம் பெற்றது. (4-6-285)

## சித்த மருத்துவ முகாம்

(முல்லைத்தீவு)

இந்தியத்துணைத் தூதரகத்தின் அனுசரணையுடனான சித்த மருத்தவ முகாம் முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள விசுவமடு மத்திய சன சமூக நிலையத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட ஆயுர்வேத ஒருங்கிணைப்பாளர் மருத்துவர் பி.சிறிகணேசன் அறிவித்துள்ளார். (4-6-316)

## ஒட்டுத் தொழிற்சாலையை மீள இயங்க வையுங்கள்

### பிரதேச மக்கள் கோரிக்கை



(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொழில் வாய்ப்பை வழங்கக் கூடிய வகையில் ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையை மீள இயங்க வைப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பண்டாரவன்னியன் ஓட்டுத் தொழிற்சாலை, கடந்த கால யுத்தம் காரணமாக சேதமடைந்து, செயலிழந்து காணப்படுவதனால் இதனை நம்பி வாழ்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்கள், பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன.

மக்கள் மீள்குடியேறி 12 வருடங்களாகியுள்ள நிலையிலும் இதனை இயங்க வைப்பதற்கு இதுவரை நடவடிக்கைகள் எதுவும் முன்னெடுக்கப்படவில்லை எனவும் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

200க்கும் மேற்பட்டவர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கிய ஓட்டுத் தொழிற்சாலை, 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தம் காரணமாக செயலிழந்த நிலையில் காணப்படுகிறது எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (4-6-315)

## மது போதையில் வாகனம் செலுத்தியோருக்கு 25 ஆயிரம் தண்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சியின். பல்வேறு பகுதிகளிலும் மதுபோதையில் வாகனம் செலுத்திய ஒன்பது பேருக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் மது போதையில் வாகனம் செலுத்திய ஒன்பது பேர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக வழக்குகளை பதிவு செய்த கிளிநொச்சி பொலிஸார் குறித்த சந்தேக நபர்களை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் ஆஜர்படுத்தி இருந்தனர்.

இவ்வாறு மதுபோதையில் வாகனங்களைச் சாரதிகளுக்கு தலா 25,ஆயிரம் ரூபாய் வீதம் தண்டப்பணம் விதிக்கப்பட்டது. இதேவேளை காப்புறுதிப் பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் தவறான முறையில் வாகனத்தைச் செலுத்திச் சென்ற இரண்டு பேருக்கு தலா 5000 ரூபாவும் தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரங்களை 6 மாத காலத்திற்கு இடைநிறுத்தி வைக்குமாறு நீதிமன்றம் கட்டளையிட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-6-315)

## வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த பொலிஸார் விசேட நடவடிக்கை

(குருமன்காடு)

மின்சார தடை நேரத்தில் ஏற்படும் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்த வவுனியா பொலிஸார் விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதனடிப்படையில். வவுனியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வெளிச்சமின்றி (லைட்) துவிச்சக்கர வண்டிகளை செலுத்துபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை வவுனியா பொலிஸார் மேற்கொள்ள வுள்ளனர்.

அந்த வகையில் நேற்று முன்தினம் இரவு வெளிச்சமின்றி துவிச்சக்கரவண்டியில் பயணித்த 100க்கு மேற்பட்டவர்களின் விபரங்கள் பொலிஸாரினால் சேகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-6-250)

## சட்டவிரோத மணல் அகழ்வு இரண்டு லட்சம் அபராதம்

(கண்டாவளை)

கிளிநொச்சி பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச் சென்ற குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டவருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மணல் அரசுடமையாக்கப்பட்டது.

கிளிநொச்சி பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி டிப்பர் வாகனத்தில் மணல் அகழ்ந்து ஏற்றிச் சென்றவரை கைது செய்த பொலிஸார் அவருக்கு எதிராக வழக்கு பதிவு செய்து நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிமன்ற நீதிவான் எஸ். லெனின் குமார் முன்னிலையில் ஆஜர்படுத்தியதையடுத்து குறித்த குற்றச்சாட்டுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் மணல் அரசுடமையாக்கப்பட்டது. (4-6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புகையிரதம்...

வம் இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் பண்டத்தரிப்புச் சாந்தைப் பகுதியைச் சேர்ந்த சதாசிவம் சசிக்குமார் (வயது-46) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த புகையிரதம் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-18,33,101,104)

## யாழ்ப்பாணத்தில்...

களுக்கு வழமைபோன்று விநியோகிக்கப்பட்டு வருகின்றது. காங்கேசன்துறை எரிபொருள் களஞ்சியத்தில் தேவையான போதியளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது.

தேவையான அளவு எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றது. எனவே பொதுமக்கள் முண்டியடித்து சேமித்து வைத்து செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்த தேவையில்லை. அத்தோடு வழமைபோன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிபொருள் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

எனவே செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் பொதுமக்கள் ஈடுபட வேண்டாம். அத்தோடு எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் பொதுமக்களின் வழமையான எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான எரிபொருளை மாத்திரம் விநியோகிக்குமாறு அறிவுறுத்தியுள்ளதோடு ஏனைய பதுக்கல், சேமித்து வைக்கும் முகமான கொள்வனவிற்கு எரிபொருளை விநியோகிக்க வேண்டாம் எனவும் அறிவுறுத்தியுள்ளார். (ம-18,33,104)

## 24 பேர்...

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 16,166ஆக அதிகரித்துள்ளது. (ம)

## திங்கள் முதல்...

வேளைகளில் மின்சார துண்டிப்பு அமுலாக்கப்படமாட்டாது என அந்த ஆணைக் குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பகல்வேளையில் ஏ.பி மற்றும் சி வலயங்களில் 3 மணித்தியாலயங்களும் ஏனைய வலயங்களில் 2 மணித்தியாலமும் 30 நிமிடங்களும் மின் துண்டிப்பு அமுலாக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## +988 பேருக்கு...

உறுதியான மேலும் 988 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 644,060ஆக அதிகரித்துள்ளது. (ம)

## அதிகரிக்கும்...

வில்லை என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும், லங்கா ஐ.ஓ.சி தமது எரிபொருள் விலையை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் டீசல் லீற்றருக்கு 15 ரூபாய் வீதமும் பெற்றோல் விலை லீற்றருக்கு 20 ரூபாய் வீதமும் அதிகரித்துள்ளது. லங்கா ஐ.ஓ.சி நிறுவனம் கடந்த 6ஆம் திகதியும் எரிபொருள் விலையை அதிகரித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ம)

## வெற்றி பெற...

தேர்தலின்போது தனக்கு சிங்கள மக்கள் மட்டும் வாக்களித்துள்ளனர் என்றும் தமிழ் அல்லது முஸ்லிம் வாக்கில்லாமல் வெற்றிபெற முடியாது என்பதை இவர்கள் மாற்றியுள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது பெரும்பான்மையான சிங்களப் பிரஜைகள் தமக்கு வாக்களித்தனர் என்பது அனைவரும் அறிந்ததே என ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டை ஆட்சி செய்யும்போது, பொது மக்களின் சுதந்திரம் மற்றும் எதிர்பார்ப்புகளை உறுதிசெய்யும் ஜனநாயக முறைமையிலிருந்து விலகப்போவதில்லை என்று, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இருப்பினும், அதனால் கிடைக்கும் சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டாமென்று, அனைத்துத் தரப்பினரிடமும் ஜனாதிபதி கேட்டுக் கொண்டுள்ளார். (ம)

## வெளிநாடு...

வது தொடர்பில் புதிய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மார்ச் மாதம் 01ஆம் திகதிக்கு பின்னர் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு செல்லும் இலங்கையர்கள் புறப்படுவதற்கு முன்னர் பிசிஆர் அறிக்கையை பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் உபுல் தர்மதாச இதனைத் தெரிவித்துள்ளார். (ம)

## மோதல் தொடர்...

உக்ரைன் - ரஷ்ய மோதல் 3ஆவது நாளாக தீவிரமடைந்துள்ளதுடன், பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில், உக்ரைன் இராணுவ வீரர்களை போல வேடமிட்டு அவர்களின் சீருடையில் உக்ரைன் தலைநகர் கீவ் பகுதிக்குள் நுழைந்த ரஷ்ய இராணுவத்தினரை சுட்டு வீழ்த்தியுள்ளதாக உக்ரைன் இராணுவம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, இதுவரை 3,500க்கும் மேற்பட்ட ரஷ்ய படையினர் கொல்லப்பட்டுள்ளதாக, உக்ரைன் இராணுவம் தனது முகநூல் பக்கத்தில் தெரிவித்துள்ளது.

இந்த படையெடுப்பில் ஈடுபட்ட 3,500க்கும் மேற்பட்ட ரஷ்ய படையினர் கொல்லப்பட்டுள்ள தாகவும், சுமார் 200 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைனில் போர் தீவிரமடைந்துள்ள நிலையில், உக்ரைனுடன்உயர் மட்ட அளவில் பேச்சுவார்த்தைகளை நடத்த தயாராக இருப்பதாக ரஷ்ய அதிபர் புடின் கூறினார்.

இந்நிலையில், போரை நிறுத்தி விட்டு பேச்சுவார்த்தைக்கு வர உக்ரைன் மறுத்து விட்டதாக ரஷ்யாவின் கிரெம்ளின் மாளிகை குற்றம் சாட்டி உள்ளது.

மேலும், பேச்சுவார்த்தைக்கு உக்ரைன் முன்வராததால் தாக்குதல் தீவிரமடையும் என ரஷ்ய செய்தித் தொடர்பாளர் பெஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

இது ஒருபுறமிருக்க ரஷ்யாவின் படையெடுப்புக்கு எதிராகவும் உக்ரைன் மக்களுக்கு ஆதரவாகவும் உலகின் பல்வேறு நாடுகளில் மக்கள் பெருந்திரளாக கூடி போராட்டம் நடத்தியவண்ணம் உள்ளனர். (ம)


தன நிதானய
திகதி - 2022.02.26
சீட்டிழுப்பு இலக்கம் - 720
K 22 45 48 69

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 26.02.2022
சீட்டிழுப்பு இலக்கம் 2985
L 13 47 68 70

மஹஜன சம்பத
திகதி 2022/02/26
சீட்டிழுப்பு இலக்கம் 4690
F 8 3 9 4 3 0

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.02.26
சீட்டிழுப்பு இலக்கம் 0031
சிம்மம் 09 34 40 55 சிம்மம்

மெகா பவர்
திகதி 26/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1038
E 05 21 24 26 78

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 26/02/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1216
மகரம் 8 4 5 9 0 4

அத கோடிபதி
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1493
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 26.02.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,786,660
08 11 17 19 V

சனிதா
சீட்டிழுப்பு இல: 3828
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 26.02.2022
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,408,320
37 60 61 74 S

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1667
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 26.02.2022
தினம் சனி
V 11 13 55 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,193,570/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 6,701,038/-
திகதி 26.02.2022
சீட்டிழுப்பு வாரம் 3379
வர்ணம் இளநீலம்
21 27 33 40 மிதுனம்
5 2 3 6 2 2 8
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,943,260/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 30 41 60 61 75
843
2022.02.26 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 216,651,241/-

சங்வர்தன வாசனாவ
திகதி: 2022-02-26
வெற்றி வாரம்: 489 | வர்ணம்: சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ. 13,920,724/-
U 04 37 67 7
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,664,060/-
ரூ. 14,028,224/-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Computer Operator ஆண் தேவை

ஹாட்வெயர் விநியோகத் தளத்திற்கு நன்கு கணனி அனுபவமுள்ள வேலையாள் தேவை.

Expected : School Leavers.
Interview : 07.03.2022
Salary : Negotiable

SPN Motors,
No.149, Stanley Road,
Jaffna.

(C-3856)

077 358 3693, 076 686 1851
021 222 9733

## Sales Representative Job

Immediate vacancy for Distributor marketing representative for a well reputed company related to hardware business in the Northern Area. With attractive salary.

(C-3855)

Please Forward CV : raviwarman@gmail.com
Contact Number : 077 358 3693

## விற்பனைக்கு

உயர்ந்த இன ஆடுகள், மாடு மற்றும் லயன் ஷெப்பட் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
இடம் : கோண்டாவில் வடக்கு, யாழ்ப்பாணம். (10390)

074 039 9189
077 745 3835

## கணக்காளர் தேவை (பெண்)

தகைமை: கணனி அறிவு
A/L கொமர்ஸ்
விரும்பத்தக்கது. (10349)

077 244 8216

## வேலையாள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல ஹாட்வெயர் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.
Store Keeper
18 - 30 வயதுக்குட்பட்டவர்கள்.
யாழ். நகரத்திற்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது. (10356)

076 139 4583
074 174 5273

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975 /=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-3785)

0768226240 DHL

## பணிப்பெண் தேவை

பெண் முதியவர் ஒருவரை பராமரிப்பதற்கு இரவு பகல் இரு நேரமும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
யாழ்ப்பாணம் (10349)

077 244 8216

## சேல்ஸ்மான் தேவை

யாழ். நகரில் இயங்கும் எமது பிடைவைக் கடைக்கு O/L, A/L படித்த பிடைவை வியாபாரம் பழக ஆர்வம் உள்ளவர்கள் தேவை.
நேரில் வரவும்.
சென்னை பெசன்ஸ்
இல. 63, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 – 3.00 வரை
(10400)

## ஓலைச்சுவடி சோதிடம்

ஓலைச்சுவடி மூலமாக காண்டம் வாசிக்கப்படும்.
இந்தியாவில் இருந்து [ வைத்தீஸ்வரன் கோவில் ]
அதிசூட்சும காண்டம்
அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும்
(10401)

Call - 076 328 7119
WhatsApp - 077 630 6290

## சிறுநீரகம் தேவை

36 வயதுடைய பெண் ஒருவருக்கு O+ இரத்த வகையை உடைய சிறுநீரகம் தேவை. (10294)

077 642 1264
076 857 3934
Whatsapp/ Viber :
0033652581658

## IELTS

A course that can change the course of your life!

Improve your vocabulary | Grammar
Spoken | Accent | Personality etc.

IELTS - PREPARATION CENTRE

**JAFFNA COLLEGE**
UNDERGRADUATE DEPARTMENT

TP : 021 222 0384, 021 222 3382
No. 464, Hospital Road, Jaffna.
(C-3846)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து நிலாவரை புத்தூர் றோட்டில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம்.
(வாகையடி சந்தி) 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
(10399)

074 269 0854

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

# NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD - JAFFNA

## 2022 A/L

Day Class

நேரடி வகுப்புக்கள்,
நிகழ்நிலை வகுப்புக்கள்

(C-3863)

### கணித, உயிரியல் பிரிவு

( 2021 A/L பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது. )

திங்கள் தொடக்கம் வெள்ளி வரை.

ஆரம்பம் - 07.03.2022 திங்கட்கிழமை
நேரம் - 8.00 Am

தொடர்புகளுக்கு : 077 791 7611
076 566 3006
076 569 3006

# NEW SCIENCE WORLD

NEW SCIENCE WORLD VICTORY MUST

## 2022 REVISION CLASSES

கணித விஞ்ஞான பிரிவுகள்
TAMIL AND ENGLISH MEDIUM

நேரடி வகுப்புக்களும் Zoom இன் ஊடான இணையவழி வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட உள்ளன.

**PHYSICS** : திரு. R. Kumaran
திரு. R. Kugen

**CHEMISTRY** : திரு. Dias
திரு. K.T. Shivakumar

**BIOLOGY** : திரு. N.T. Gajenthiran

**COM. MATHS** : திரு. S.S. Senthilraj
திரு. K. Ainharan

(C-3862)

ஆரம்பம் - 05.03.2022 சனிக்கிழமை
நேரம் - 3.30 p.m - 5.00 pm

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

தொடர்புகளுக்கு :
077 336 4055, 077 336 4030, 021 221 6690

அலுவலக தொடர்பு நேரம்
காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 333

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2053 27.02.2022 தொலைபேசி : 021 222 3378

## ரணகளமானது உக்ரைன்



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**ப**ண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்களில் வாத்தியார் வைத்திலிங்கத்தைத் தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று பண்டிதர் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

வழமையில் வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடுவதாக இருந்தாலும் அவர் வராத காரணத்தால் பண்டிதர் பரமலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

இறைவணக்கத்தைத் தொடர்ந்து எழுந்த பண்டிதர்; காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தின் அறங்காவலர்களில் ஒருவரான முருகேசு சுந்தரலிங்கம் ஐயா அவர்கள் காலமாகி விட்டார். ஆலயப் பணி ஊடாக ஆன்மிகப் பணியாற்றிய அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து காரை மணிகண்டன் என்று அனைவராலும் அழைக்கப்படும் காரை. லயன் கனகசபை சுந்தரலிங்கம் அவர்கள் காலமாகிய செய்தியறிந்து வேதனையடைகின்றோம். அவரின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, மீண்டும் அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

என்ன இன்னும் வாத்தியாரைக் காணவில்லை. ஏதும் உடல் நிலை சரியில்லையோ, சாத்திரியார் சதாசிவம் வினவினார்.

**மூப்பர்:** இப்பதானே நான்கு மணித்தியாலமும் நாற்பது நிமிடமும் கரன்ட் கட்டாகுது. அதால வீட்டில இருந்து வெளிக்கிட முடியாமல் இருக்கும்.

**கங்காணி:** இண்டைக்கு நயினாதீவு நாகபூஷணி அம்மனிட்டப் போறதெண்டு வாத்தியார் சொன்னவர். அதுதான் அவர் இன்னமும் வரவில்லப் போல. இவ்வாறு கங்காணி கார்த்திகேயன் கூறி முடிக்க, வாத்தியாரும் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

**மூப்பர்:** இந்தா வாத்தியார் வந்திட்டார். அவருக்கு ஆயுள் நூறு.

**கங்காணி:** என்ன வாத்தியார் நயினாதீவுக்குப் போனதோ.



## யாழ்ப்பாணம் சிறாம்பியடி வீதியை ஒருவழிப் பாதையாக ஆக்க வேணும்

**வாத்தியார்:** ஓ! நயினாதீவுக்குப் போய் நாகம்மாளைத் தரிசித்தன். ஆனால் குறிகாட்டுவான் வீதியால பயணிப்பதில இருக்கிற உபத்திரம் தான் சொல்லி மாளா.

**விதானையார்:** ஏன் வாத்தியார் என்ன நடந்தது.

**வாத்தியார்:** புங்குடுதீவு தாம்போதிதான் இலங்கையில மிக நீளமான வீதி. ஆனால் அந்த வீதி கிடக்கிற கிடையைப் பார்க்க வயிறு பத்தி எரியுது. குச்சொழுங்கை எல்லாம் காப்பெற் வீதி போடுற இந்த நேரத்தில புங்குடுதீவுத் தாம்போதியும் குறிகட்டுவான் வீதியும் இன்னமும் திருத்தப்படாமல் பிட்டியும் பள்ளமுமாகக் கிடக்குது.

**சிறாப்பர்:** இப்ப தீவகம் கைவிடப்பட்ட பிரதேசம்தானே. தீவகத்தை முன்னேற்றுகிற எண்ணம் ஆருக்காவது இருந்திருந்தால், யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்தின்ர ஒரு பீடத்தை அல்லது தேசிய கல்வியியற் கல்லூரியை அல்லது ஜப்னா யுனிவேசிற்றிக் கொலிச்சைத் தீவகத்தில அமைத்திருப்பினம். ஆனால் அது எதுவும் நடக்கல்ல எனும் போது தீவகம் எப்படி முன்னேறும்.

**வாத்தியார்:** நீங்கள் இதைச் சொல்லுறியள் குறிகட்டுவான் இறங்குதுறையில நயினாதீவு மற்றும் நெடுந்தீவு போன்ற இடங்களுக்குச் செல்லுகின்ற மக்கள் வந்த ஒழுங்கில வரிசையாகச் செல்வதற்குக் கூட உரிய ஏற்பாடு இல்லை.

வரிசையாக இருந்து செல்வதற்குரிய ஒழுங்கு இருந்தாலும் லோஞ்சிக்கு ஏறுகிற போது, இரு வரிசையாலும் பயணிகள் வெளியேறக்க மிகப் பெரிய நெருக்குப் பாடு ஏற்படுகுது.

எனினும் அதுபற்றியெல்லாம், ஒழுங்குபடுத்தலில இருக்கிற கடற்படையினர் கவனம் செலுத்துவதாக இல்லை.

**விதானையார்:** ஓ! நயினாதீவுக்குப் போகிற சிங்கள மக்களுக்கு முன்னுரிமை வழங்கிறதில கடற்படையினர் கண்ணும் கருத்துமாக இருப்பதாகக் கேள்விப் பட்டனான்.

**வாத்தியார்:** அதிலும் இன்னொரு சிக்கலும் இருக்குது. நயினாதீவுக்குச் செல்ல குறிகட்டுவானில லோஞ் ஏறினால், முதலில விகாரை இருக்கிற இறங்குதுறைக்குத்தான் அந்த லோஞ் போகும்.

ஆனால் அந்த லோஞ் சில கடமையாற்றுகிற எவரும் விகாரை வந்திட்டுது இறங்குங்க, நாகபூஷணி அம்மாளிட்ட போறவியள் இருங்க எண்டு சொல்லுறதில்லை.

ஏதோ தங்களுக்கு இடம் தெரியும் எண்டால் எல்லோருக்கும் இடம் தெரியுமெண்ட மாதிரி லோஞ்காரர் இருக்கினம்.

ஆனால் நயினாதீவு விகாரைக்கு வருகிற சிங்கள மக்கள் விகாரைத் துறைமுகத்தில இறங்க வேணும் எண்டது பற்றித் தெரியாமல், அந்தரப்படுவதைப் பார்த்தன். உண்மையில அதுபற்றிய அறிவித்தல்களை ஒவ்வொரு லோஞ்காரரும் வழங்க வேணும்.

(இவ்வாறு வாத்தியார் கூறினார்.)

**சாத்திரியார்:** அப்ப வாத்தியார் ஆலடி மாநாட்டில ஒவ் வொரு முறையும் ஒவ்வொரு தீர்மானம் நிறைவேற்றுகிற விட யத்தில, நயினாதீவுப் பயண விபரத்தைச் சேர்ப்பமோ.

**வாத்தியார்:** நயினாதீவு விவகாரம் தெளிவாகச் சொல்லப்பட்டிட்டுது. நான் நினைக்கிறன் இண்டைக்கு; யாழ்ப்பாணம் சிறாம்பியடி வீதியை ஒரு வழிப்பாதையாக ஆக்க வேணும் எண்ட தீர்மானத்தை நிறைவேற்றுறதுதான் நல்லது.

**பண்டிதர்:** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:** யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியும் பலாலி வீதியும் சந்திக்கிற இடத்தில இருந்து யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியை இணைக்கிற ஒரு குறுந்தூர வீதி இருக்குது. அதுக்குத்தான் சிறாம்பியடி வீதி எண்டு பெயர்.

ஆரியகுளம் சந்தியில சிக்னல் பொயின்ட் இருக்கிறதால ஸ்ரான்லி வீதியால வாறவியளும் பருத்தித்துறை வீதி- பலாலி வீதியால வாறவியளும் சிறாம்பியடி வீதியால வாகனத்தை விடுகினம். இதால ஒடுக்கமான அந்தச் சிறாம்பியடி வீதி போக்குவரத்து நெருக்கடியால திணறுது.

எனவே யாழ்ப்பாணம் சிறாம்பியடி வீதியை ஒருவழிப்பாதையாக ஆக்க வேணும் எண்டு ஒரு தீர்மானத்தை எடுப்பம்.

இவ்வாறு வாத்தியார் கூற, அந்தத் தீர்மானத்தை ஆலடியில இருந்தவர்கள் ஏகமனதாக ஆதரிக்க,

அந்நேரம் பார்த்து சரியான தீர்மானத்தை எடுத்திருக்கிறியள் என்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " உருக்குலைகிறது உக்ரேய்ன் "

உக்ரேய்ன் எல்லையில் நீண்ட நாள்களாகப் படைகளுடன் காத்திருந்த ரஷ்யா, கடந்த 24 அன்று உக்ரேய்னுக்குள் நுழைந்து தாக்குதலைத் தொடங்கியது. ஐ.நா சபை மற்றும் உலக நாடுகள் விடுத்த கோரிக்கைகளைப் புறந்தள்ளிவிட்டு, போரைத் தொடங்கியிருக்கிறார் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்.

**பரசூட்டில் குதித்த ரஷ்ய இராணுவத்தினர்!**

ரஷ்ய ஜனாதிபதி புடின், உக்ரேய்ன் மீது இராணுவ நடவடிக்கையைத் தொடங்க உத்தரவிட் டிருப்பதாகச் செய்தி வெளியிட்டது ஏ.எஃப்.பி செய்தி நிறுவனம். ரஷ்ய ஜனாதிபதி புடினின் உத்தரவை அடுத்து உக்ரேய்ன் தலைநகர் கீவ், கிழக்கு உக்ரேய்னில் இருக்கும் சில நகரங்களில் ரஷ்ய விமானப்படை தாக்குதல் நடத்தத் தொடங்கிவிட்டதாக, சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. தொடர்ந்து தாக்குதல்கள் தொடர்பான வீடியோ காட்சிகளும் வெளியாகின. வான்வழித் தாக்குதல் மட்டுமின்றி, பரசூட்டில் உக்ரேய்ன் எல்லைக்குள் குதித்த ரஷ்ய இராணுவ வீரர்கள் தரைவழித் தாக்குதலிலும் ஈடுபட்டனர். பரசூட்டில் இராணுவத்தினர் இறங்கும் காணொலிகள் இணையத்தில் வைரலாகின!

**ஆப்ரேஷன் Z!**

ரஷ்யா, உக்ரேய்ன் மீது நடத்தி வரும் தாக்குதல்களுக்கு 'ஆபரேஷன் Z' (Operation Z) என்று பெயரிடப்பட்டிருக்கிறது. ரஷ்யாவின் பீரங்கிகள், போர் வாகனங்களில் `Z' என்ற எழுத்து பொறிக்கப்பட்டிருக்கிறது. முதலில், "ரஷ்யாவின் இராணுவ ஹெலிகொப்டரையும், ஐந்து போர் விமானங்களையும் சுட்டு வீழ்த்திவிட்டோம்' என உக்ரேய்ன் செய்தி வெளியிட, உக்ரேய்னின் விமான தளங்களையும், வான் பாதுகாப்பு தளபாடங்களையும் அழித்து விட்டோம்' என்றது ரஷ்யா. ரஷ்ய இராணுவத்தைச் சமாளிக்க முடியாததால், ஓய்வு பெற்ற இராணுவ வீரர்களுக்கும் போரில் ஈடுபட ஆயுதங்கள் வழங்கி வருவதாக அறிவித்தது உக்ரேய்ன்.

**எச்சரித்த புடின்!**

இதற்கிடையே ரஷ்யா - உக்ரேய்ன் விவகாரம் தொடர்பாக நடந்த ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலின் அவசரக் கூட்டத்தில், "ரஷ்யப் படைகள், உக்ரேய்ன் மீதான தாக்குதல்களை நிறுத்திக்கொள்ள வேண்டும். அமைதிக்கு ஒரு வாய்ப்பு தாருங்கள்" என்று புடினைக் கேட்டுக் கொண்டார் ஐ.நா. பொதுச் செயலாளர் ஆன்டனியோ. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன், "பெரும். உயிரிழப்பு, மனித இனத்துக்குத் துன்பத்தைத் தரும் ஒரு திட்டமிடப்பட்ட போரைத் தேர்ந்தெடுத்திருக்கிறார் புடின். இந்தத்தாக்கு தல்களால் ஏற்படும் அனைத்து அழிவுகளுக்கும், உயிரிழப்புகளுக்கும் ரஷ்யா மட்டுமே பொறுப்பு'' என்று தனது கண்டனத்தைப் பதிவுசெய்திருக்கிறார். "ரஷ்யாவின் போர் நடவடிக்கைகளுக்குத் தக்க பதிலடி கொடுப்போம்" என்றிருக்கிறார் பிரிட்டன் ஜனாதிபதி போரிஸ் ஜான்சன். ரஷ்ய ஜனாதிபதி புடினோ, " எங்களுக்கும் உக்ரேய்னுக்கும் இடையே நடக்கும் போரில் எந்த நாடாவது குறுக்கிட்டால், அவர்கள் வரலாறு காணாத மோசமான பாதிப்புகளைச் சந்திக்க நேரிடும்" என எச்சரித்திருக்கிறார்!

**'எங்கள் நாட்டைக் காப்பாற்றுங்கள்!'**

'ரஷ்யாவின் தாக்குதலிலிருந்து எங்கள் நாட்டைக் காப்பாற்றுங்கள்' என்று உலக நாடுகளுக்குக் கோரிக்கை வைத்தது உக்ரேய்ன். மேலும், 'ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராக உள்ள ஒரு நாடு இப்படி விதிகளை மீறிச் செயற்பட்டால், மற்ற நாடுகளும் இதைப் பின்பற்ற நேரிடும்' என்றும் ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் தெரிவித்திருக்கிறது உக்ரேய்ன்.

**உயிரிழந்த பொதுமக்கள்!**


ரஷ்யா போரைத் தொடங்கி விட்டதாகச் செய்திகள் வெளியானதும், உக்ரேய்ன் தலைநகர் கீவிலிருந்து மக்கள் பலரும் வெளியேற முயன்றதால், வீதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. ஏ.டி.எம்களில் பணம் எடுக்க மக்கள் நீண்ட வரிசையில் நின்றனர். உக்ரேய்னின் முக்கிய நகரங்களின் குடியிருப்புப் பகுதிகளிலும் ரஷ்யா தாக்குதல் நடத்தியதால், அங்கிருந்த மக்கள் பலரும் மெட்ரோ சுரங்கப் பாதைகளில் தஞ்சமடைந்தனர். இதற்கிடையில், உக்ரேய்னிலிருக்கும் ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் லூகான்ஸ்க் பகுதியிலுள்ள இரண்டு நகரங்களைத் தங்களது கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வந்துவிட்டதாகத் தகவல் தெரிவித்தனர்.

ரஷ்யாவின் தாக்குதல்களால் தங்களது நாட்டைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் உயிரிழந்துவிட்டதாக உக்ரேய்ன் அறிவித்தது. மேலும் லுகான்ஸ்க், கார்கிவ் உள்ளிட்ட நகரங்களிலுள்ள குடியிருப்புப் பகுதிகளில் ரஷ்யப் போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்ததால், பொதுமக்கள் உயிரிழந்திருப்பதாகச் செய்திகள் வெளியாகின. தொடர்ந்து, 'உக்ரேய்ன் வீரர்கள் பலரும் ஆயுதங்களைக் கீழே போட்டு விட்டுச் சரணடைந்து வருகிறார்கள்' என்று அறிவித்தது ரஷ்யா. உக்ரேய்ன் தலைநகர் கீவில் அமைந்திருக்கும் அன்டனோவ் விமான நிலையத்தை ரஷ்ய இராணுவம்கைப்பற்றிவிட்டதாகச் தெரிவித்திருக்கிறது.

**பொருளாதார நெருக்கடி?**

போர் எதிரொலியாக, அமெரிக்க டொலருக்கு இணையான ரஷ்யாவின் ரூபிள் கரன்சியின் மதிப்பு சுமார் 10 சதவிகிதம் குறைந்தது. போர் காரணமாக பெப்ரவரி 24 அன்று, பங்குச் சந்தையின் குறியீட்டு எண் சென்செக்ஸ் 2,702 புள்ளிகள் சரிவைச் சந்தித்தது. உலகளவில் தங்கத்தின் விலையும் கிடுகிடுவென உயர்ந்தது. சர்வதேசச் சந்தையில், ஒரு பரல் கச்சா எண்ணெயின் விலை கடந்த ஏழு ஆண்டுகளில் இல்லாத அளவு 100 அமெரிக்க டாலரைத் தாண்டியது. வரும் நாள்களில் பெட்ரோல், டீசல் விலையும் உயர வாய்ப்பிருப்பதாகத் தெரிகிறது. ரஷ்யா - உக்ரேய்ன் போரால் உலகம் முழுக்கவே பொருளாதார நெருக்கடிகள் ஏற்படும் அபாயம் இருப்பதாகவும் கூறப்படுகிறது!

**ஜூனியர் விகடன்**



**"விதிமுறைகளை மீறிக் குடியிருப்புப் பகுதிகளில் ரஷ்யா தாக்குதல்களை நடத்திவருகிறது. ரஷ்யாவின் தாக்குதல்களை உலக நாடுகள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றன. எந்த நாடும் எங்களுக்கு உதவி செய்ய முன்வரவில்லை. நேட்டோ படைகளையும் காணவில்லை. இரண்டாவது நாளாகத் தனியாகப் போராடிக் கொண்டிருக்கிறோம்" என்று வேதனை தெரிவித்திருக்கிறார் உக்ரேய்ன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி. மேலும், "தயவு செய்து உதவி செய்யுமாறு" உலக நாடுகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்.**

கைவிட்ட நோட்டோ!

உக்ரேய்ன், நோட்டோ கூட்டமைப்பில் சேர நினைத்ததுதான் இந்தப் போருக்கு முக்கியக் காரணமாகப் பார்க்கப்படுகிறது. ஆனால், நோட்டோ படைகளும் தற்போது உக்ரைனைக் கைவிட்டுவிட்டதால் பெரும் பாதிப்புகளைச் சந்தித்துவருகிறது உக்ரேய்ன். ஆரம்பக் கட்டத்தில், ரஷ்யா தனது படைகளை உக்ரேய்ன் எல்லையில் நிறுத்தியபோது, பதிலுக்கு நோட்டோவும் தனது படைகளை போலாந்து, ஹங்கேரி, ருமேனியா ஆகிய ரஷ்யாவின் அண்டை நாடுகளுக்கு அனுப்பியது. ஆனால், போர் தொடங்கிய பிறகு நோட்டோ படைகள் உக்ரேய்னுக்கு உதவ முன்வரவில்லை. நோட்டோ படைகள் உதவிக்கு வராதது ரஷ்யாவுக்கு பெரும் சாதகமாகிவிட்டது.

"உக்ரேய்ன் எங்களது நோட்டோ கூட்டமைப்பின் உறுப்பு நாடு அல்ல் அதனால் எங்கள் படைகளை உக்ரேய்னுக்குள் அனுப்ப முடியாது. எங்களது உறுப்பு நாடுகளான போலாந்து, ஹங்கேரி உள்ளிட்ட நாடுகள்மீது ரஷ்யா கைவைத்தால், திருப்பி அடிக்க தயங்கமாட்டோம்" என்றிருக்கிறது நோட்டோ.

நோட்டோ படைகளும், அமெரிக்காவும் தங்களது நாட்டுக்கு ஆதரவாக இருக்கும் என்ற தைரியத்தில், வலிமையான படைபலம் கொண்ட ரஷ்யாவுக்கு எதிராகச் சவால்விட்டு வந்தார் உக்ரேய்ன் ஜனாதிபதி. ஆனால், தற்போது யாருடைய உதவியும் கிடைக்காமல் தவித்துக் கொண்டிருக்கிறது உக்ரேய்ன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பராமாயணம்

## பால காண்டம்



திருமணம் உறுதி செய்யப்பட்டது. தசர தனுக்குச் செய்தி அறி விக்கப்பட்டது. இரா மன் வில்லை முறித்த வெற்றிச் செய்தியை யும், அவன் வேல் விழி யாளை மணக்க இரு க்கும் மங்கலச் செய்தி யையும் கேட்டுத் தசர தனே பெருமிதமும் மகிழ்ச்சியும் கொண் டான்; நாற்பெருஞ் சேனையும், அரும் பெரும் சுற்றமும், தம் அன்பு மனைவியரும், இராமன் பின் பிறந்த தம்பியரும் அறிவுடை அமைச்சர்களும், ஆன்ற மைந்த சான்றோன் ஆகிய வசிட்டரும்புடை சூழ மிதிலை மாந கரை வந்து அடைந் தான். மன்னர் வீற் றிருந்த மணி மண்ட பத்தில் மடமயிலை மகளாய்ப் பெற்ற மாமன் னன் சனகன் வந்து அமர்ந்தான்; கோல அழகியாகிய கோம களை அழைத்துவரச் சேடியரை அனுப்பி னான். மணக் கோலத் தில் வந்த மாணலம் மிக்க பேரழகி தந்தை யின் அருகில் அமர் ந்து, அம் மண்டபத் திற்குப் பெருமை சேர்த் தாள்.

**சீதையைப் பாராட் டினர்**

பொன்னின் ஒளியும், பூவின் பொலிவும், தேனின் சுவையும், சந் தனத்தின் குளிர்ச்சி யும், தென்றலின் மென் மையும், நிலவின் ஒளி யும் ஒருங்கு பெற்ற அவள், அன்னநடை யைத் தன் நடையில் காட்டினாள்; மின்னல் போல் ஒளி வீசி அவ் அரங்கினை அலங்கரி த்தாள். அமுதம் போன்ற இனிமையையும் குமு தம் போன்ற இதழ் களையும் உடைய அவ் ஆரணங்கு, அங்கிருந் தவர் கண்ணையும் கரு த்தையும் ஒருங்கு கவர்ந் தாள்.

மாடத்தில் இருந்து தான் கண்ட மாணிக் கத்தை மறுபடியும் காணும் வாய்ப்பைப் பெற அவள் விரும்பி னாள். நேரில் காண அவள் நாணம் போரி ட்டது; தலை நிமிர்த் திக் காண்பதைத் தவி ர்த்துத் தன் கை வளை யல்களைத் திருத்து வதுபோல அக்கார் வண்ணனைக் கடைக் கண்ணால் கண்டு அவன் அழகைப் பருகினாள்; மனம் உருகினாள். தன் உள்ளத்தை ஈர்த்த அத் தூயவனே அவன் என் பதை உணர்ந்தாள், "ஓவி யத்தில் எழுத ஒண் ணாப் பேரழகு உடைய காவிய நாயகன் இரா மன்தான் அவன்" என் பதை உறுதிப்படுத் திக் கொண்டாள். நாணம் அடைந்தாள். நாகரி கமாக அந்த நளினி நடந்து கொண் டதை அங்கிருந்த நங்கையர் பாராட்டி னார்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்

## உருவுகண்டு எள்ளாமை வேண்டும்



ஒரு காட்டில் சிங்கம் ஒன்று வசித்து வந்தது. அது தனது பலத்தா லும், தோற்றத்தாலும், கர்ஜனையாலும் காட் டில் வசித்த அனைத்து மிருகங்களையும் பய முறுத்தி வந்தது.

பயம் காரணமாய் அனைத்து மிருகங்களும் சிங்கத்திற்கு கிட்டச் செல்வதில்லை. சிங்கத் தைக் கண்டால் பயந்து ஓடிவிடுகின்றன.

ஆனால் 'ஈ" ஒன்று பயமின்றி சிங்கத்தின் மீது வந்து அமர்ந்தது. அதைப் பார்த்ததும் சிங் கம் கோபமுற்று கர் ஜனை செய்தபடியே..' உன்னை என் பற்களால் கடித்துக் குதறுவேன், நகங்களால் விறாண்டு வேன், நசுக்கிப் பொசி க்கிப் போடுவேன் என்றது.

அதற்கு ஈயோ நீ பல சாலியாய் இருக்கலாம். உன்னைப் பார்த்து மற்ற மிருகங்கள் பயப்படலாம். ஆனால் நான் பயப்பட மாட்டேன். இன்னும் சொல்லப்போனால்...நீ சொன்னபடி உன்னையே நீ பற்களால் கடித்துக் கொள்ளவும், நகங்களால் விறாண்டிக் கொள்ள வும் செய்வேன்" என்றது.

இதைக் கேட்ட சிங்கம் கோபத்துடன் ஏலுமா யின் அதைச் செய் என சவால் விட...ஈ பறந்து வந்து சிங்கத்தின் முது கில் அமர்ந்து அதைக் கடித்தது. ஈ முதுகில் அமர்ந்த போது...அதை விரட்ட சிங்கம் தன் பற்க ளால் முயன்ற போது...ஈ பறந்து விட சிங்கம் தன் முதுகைத் தானே கடித் துக் கொண்டது.

ஈ சிங்கத்தின் முகத்தில் அமர்ந்த போது, அதை விரட்ட தன் கால் நகங்க ளால் முயல...ஈ பறக்க- சிங்கம் தன் நகங்களால் தன் முகத்தையே விறாண் டிக் கொண்டது. இவ் வாறு பல தடவை சிங்க த்தை நன்கு இம்சை செய்து விட்டு ஈ பறந்தது.

சிங்கத்தினால் ஈயை பிடிக்கவோ நசுக்கவோ முடியவில்லை. அதனால் சிங்கம் தன் இயலா மையை எணி வெட்கப் பட்டது.

அதன் பின்புதான் சிங் கத்திற்கு புரிந்தது... தான் உடலளவில் வீர மாய் இருந்தாலும்... ஒரு சிறு ஈ தன்னை இம்சைப்படுத்தி விட் டதே என்று. உருவத் தைக் கண்டு யாரையும் எடை போடக் கூடாது

இதைத்தான் வள்ளு வரும்...

உருவுகண்டெள் ளாமை வேண்டும்
உருள் பெருந்தேர்க்
கச்சாணி யன்னார்
உடைத்து
என்றார்.

**(பொருள்- உருவத் தால் சிறிதாக இருந்தா லும் அதை கேலி செய்து அலட்சியப் படுத்தக் கூடாது. பெரிய தேர் ஓடக் காரணமாய் இருப் பது சிறிய அதன் அச்சாணியே)**



தேசிய லொத்தர் சபையினால் வடமாகாணத்திலுள்ள வவுனியா தவிர்ந்த ஏனைய நான்கு மாவட்டங்களில், ஒவ்வொரு பாடசாலை வீதம் தெரிவு செய்யப்பட்டு குறித்த பாடசாலைகளிலுள்ள நூல் நிலையங்களின் [illegible] மாணவர்களின் வாசிப்புத் திறனை வளர்க்கும் நோக்குடனும் பாடசாலை அதிபர்களிடம் நிதியுதவிகள் வழங்கப்பட்டன. தேசிய லொத்தர் சபையின் பணிப்பாளர் பி.டி.ஜெயசிறி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பாடசாலைக்கும் நேரடியாக வருகை தந்து குறித்த பாடசாலை அதிபர்களிடம் குறித்த நிதியினை நேரில் கையளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவுஸ்திரேலியாவிடம் தொடரை இழந்த இலங்கை இந்தியாவுடன் என்ன செய்யப் போகின்றது?

**சிவம் வதிரி**

**மனிதம் என்பது எது வியாசரே? அன்பால் உலகை ஆள முடியாதா?**

இராமாயணப் போரின் இறுதி நிமிடம். இராமபிரான் வெற்றி பெறும் தருணம் இராவணன் இராமனின் அம்புகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் நிராயுதபாணி யாகிறான்.

அப்போது இராமபிரான் பேசுகிறான்... இராவணா நீ அறத்தின்பால் நிற்காமல் எவ்வளவு படை பலம் வைத்திருந்தாலும் வெல்ல முடியாது.

இவற்றை நீ கேட்கவில்லை எனின், இன்று போய் போருக்கு நாளை வா என்கிறான்.

இராமபிரான் நினைத்திருந்தால் நிராயுதபாணியான இராவணனை கொன்றிருக்கலாம். அவ்வாறு செய்வது வீரனான இராமனுக்கும் அழகல்ல. இராவணனுக்கும் அழகல்ல என்பதே உண்மையானது.

**தனா யாழ்ப்பாணம்**

**நல்லவன், கெட்டவன் என்பது எவ்வாறு வரையறுக்கப்படுகின்றது வியாசரே?**

இது ஒரு குழப்பமான விடயம். ஒருவருக்கு நல்லவராய் தெரிபவர் மற்றவருக்கு கெட்டவனாய் தெரிவார்.

இதில் அன்னம் தண்ணீரை விடுத்து பாலை அருந்துவதைப் போல பிரித்தறிய வேண்டியது முக்கியமானது.

ஆனால் இங்கு நடப்பதோ வேறாக அமைந்து விடுகின்றது. அதாவது ஒருவருக்கு ஒருவனை பிடிக்கவில்லை எனின் அவன் செய்யும் நல்லவை எல்லாம் தீயவையாய் தெரியும்.

அதே ஒருவருக்கு ஒருவனை பிடித்து விட்டால் அவன் செய்யும் தீயவை எல்லாம் நல்லனவாயே தெரியும். இதை மாற்றும் வரை உலகம் திருந்த வாய்ப்பில்லை.

**தாரா வதிரி**

**ரஷ்யா- உக்ரேயன் போர் உலகில் எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தும் வியாசரே?**

உலகப் போர் மூள்வதற்கான சாத்தியப்பாடுகள் தெரிகின்றன. உக்ரேயனில் வீழ்ந்து வெடிக்கும் வெடி குண்டுகளின் கரும்புகை உலகை மூட ஆரம்பிக்கின்றது போலத் தெரிகின்றது.

அவ்வாறு ஆரம்பிக்குமாக இருந்தால் உலக அழிவை யாராலும் தடுக்க முடியாது. ஏனென்றால் இதில் முட்டி மோதும் அத்தனை நாடுகளிடத்திலும் அணுகுண்டு இருக்கிறது. ஒருவேளை அணுகுண்டை பயன்படுத்த யார் முயற்சித்தாலும் அது உலக அழிவை ஏற்படுத்தும் என்பதே உண்மையானது. உலக நாடுகள் முதலில் செய்ய வேண்டியது போரை நிறுத்துவது மட்டுமே.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
**021 567 1532**
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**தல ரசிகன் யாழ்ப்பாணம்**

**அஜித்தின் வீரம் திரைப்படம் எப்படி இருக்கின்றது வியாசரே?**

இந்திய பிரதமரையே வலிமை அப்டேட் கேட்டனர் அஜித் ரசிகர்கள்.

அந்தளவுக்கு வலிமைப்படத்தை ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தார்கள். வலிமை வழமையான அஜித் படங்களைத் தாண்டி வித்தியாசமானது.

மோட்டார் சைக்கிள் ஸ்ரெண்டை முக்கிய கதைக் களமாகக் கொண்டதாய் அமைந்துள்ளதுடன் விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாது இருக்கின்றது .

அஜித் ரசிகர்களை திருப்திப்படுத்துகின்றது வலிமை.

ஆனால் ஒரு குடும்பமாகச் சென்று வலிமையை பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் வலிமை உருவாக்கப்படவில்லை.

**சுதன் குப்பிழான்**

**பிரபாகரனின் மரணத்திற்கு மரணச் சான்றிதழ் கொடுக்காதது ஏன்?**

இருக்கின்றானா இல்லையா? என்ற ஐயத்தை விளைவித்தவர்கள் இருவர். ஒன்று கடவுள். இன்னொன்று பிரபாகரன். இதை சொன்னது சீமான்.

அதுசரி ஏன் நமக்கு தேவையில்லாத விடயம். இப்போது பிரபாகரன் இறந்ததற்கான மரணச்சான்றிதழை வாங்கி என்ன தான் செய்து விடப் போகின்றோம்.

சீமான் கூறியது போலவே இருந்து விட்டுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரஷ்யா- உக்ரேயன் போர் உலகில் எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தும் வியாசரே?

**தமிழ் யாழ்ப்பாணம்**

**எரிபொருளுக்கான தட்டுப்பாட்டை எப்படி சமாளிக்கப் போகின்றோம் மாமா?**

எரிபொருள் இல்லை எனின் சைக்கிளில் செல்லலாம், மாட்டுவண்டியில் செல்லலாம், நடந்தும் செல்லலாம். ஆனால் உண்ண உணவு இல்லை எனின் என்ன செய்வது. நோய்க்கு மருந்து இல்லை எனின் என்ன செய்வது. முதலில் நாம் செய்ய வேண்டியது யாதெனில் தற்சார்பு பொருளாதாரத்தை மேம்படுத்துவதே.

வீட்டுத்தோட்டம் செய்வோம். வீட்டில் இடம் இல்லை எனின் தகர, பிளாஸ்ரிக் போத்தல்களில் கன்றுகளை நாட்டி தொங்கு தோட்டமாயாவது முயற்சிப்போம். உலகின் பொருளாதாரம் போகிற போக்கு அவ்வளவு சரியில்லைத் தம்பி.

**ரிஷ்வின் மானிப்பாய்**

**அவுஸ்திரேலியாவிடம் தொடரை இழந்த இலங்கை இந்தியாவுடன் என்ன செய்யபோகின்றது?**

இருபது- 20 போட்டிகளை பொறுத்தவரை யாருக்கு வெற்றி, தோல்வி என்பதை கூறி விட முடியாது.

ஒரு பந்தில் கூட மாற்றத்தை ஏற்படுத்தி விட முடியும். தற்போதைய இலங்கை அணி மிகச்சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கின்றது.

தோல்வி என்பதற்கப்பால் அவுஸ்திரேலிய அணியுடன் மிகச் சிறப்பாக விளையாடியது இலங்கை அணி.

இளம் வீரர்கள் மிகுந்த அர்ப்பணிப்புடன் விளையாடி வருகின்றனர். பொறுத்திருந்து பார்ப்போம். சொந்த நாட்டிலே இந்தியாவை வீழ்த்துகின்றதா இலங்கை அணி என்பதை.

**மகேஸ்வரன் வரணி**

**ஒரு தாயின் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் திருமணத்திற்குப்பின் எதிரும் புதிருமாய் இருப்பது ஏன் வியாசரே?**

சொந்தங்களுக்குள் எங்கு பிரச்சினை இருக்கின்றதோ அங்கு ஆராய்ந்து பார்த்தால் சொத்துப்பிரச்சினையே மேலோங்கி இருக்கும்.

நீ பெரிது நான் பெரிது என்று மனதில் வன்மத்தை வளர்த்து பகையுடன் வாழ்வதே உறவின் அடையாளம் என்றாகி விட்டது.

இந்த நிலை மாறும் என்று நான் நினைக்கவில்லை. ஏனென்றால் மனித மனங்களின் வன்மம் என்பது நிலையாய் பதியப்பட்டுவிட்டது போல உள்ளது. ஏனென்றால் அந்தளவிற்கு மனித மனங்கள் வன்மம் பற்றிக்கிடக்கின்றது.

## வேண்டாம் சீன வெடி

பட்டாசு வெடிக்காதீர்கள்
காட்டோசை காதைத் துளைக்கும்
வீட்டு மிருகங்கள் தாங்காது
மட்டான ஒசையின் மும்மடங்காகும்

மழை பெய்யும் பொழுது
தலைமயிர் அழிவடையும்
அழகான குளம் ஆற்று நீர் கெடும்
சூழற் தொகுதிக்குப் பாதிப்பு

வயோதிபர் அமைதி இழப்பர்
அமைதியான தூக்கத்தைக் கெடுக்கும்
சுவாசத்தில் தும்மல், இருமல் வரும்
பாசமான குழந்தைகள் அழுவர்

சுவாசிப்பு பழுதாக்கும் செம்புலோகம்
மங்கனீசு உலோகத்தால் பக்க வலிப்பு
சுகமாக நரம்பு மண்டலம் பழுதாகும்
மாசிலா அழகுத் தோல் அழிவடையும்

வைத்திய செலவைக் குறைப்போம்
வைத்தியரின் நேரத்தை சேமிப்போம்
கைத்தொழில் ஒன்றை கற்றிடுவோம்
கமத்தொழில் செய்து உயர்ந்திடுவோம்

சி.குமாரலிங்கம்,
செம்மணி வீதி, நல்லூர்.

## வாழ்வது அச்சமே



விழுதுகள் தழைத்த வித்தக தமிழர்
காணும் துன்பங்கள் எத்தனை என்றோ
வருடங்கள் வருந்தி வளர்ச்சியை எட்ட
உயரும் விலைகள் உறக்கம் கெடுக்குது

எல்லைக்கடலில் மீன்பிடி செய்ய
உறவினம் செய்யுது அளவற்ற துன்பம்
உரத்தினை பெற்றிட விதைப்பவர் கதற
வசதிகள் படைத்தவர் கண்டுணர் மகிழ

ஆழம் திறனற்ற அரசினர் ஆள
நாளும் படும் துன்பம் ஒழியுமோ
ஒரே நாடு ஒரே சட்டம் என்றுரைக்கும்
நாடகமே வாக்காளர் இன்றுவரை கதறி அழ

இத்தனை துன்பங்கள் இல்லறம் கெடுக்க
காலம் முழுவதும் வாழ்வது அச்சமே

ந.விதுசன்
யா/ஹாட்லிக் கல்லூரி

## வாழ்க்கை ஒரு வேசம்

கருவறை உலகில்
கழிப்புற்றோம்

மடி சாய்ந்த போது
மகிழ்வுற்றோம்

மண் தவழ்ந்த போது
மனம் மகிழ்ந்தோம்

பூமியில் கால் பதித்த போது
கனவுகள் பல கண்டோம்

பள்ளி சென்ற போது
கல்வி கண்டோம்

சித்தி பெற்ற போது
சிரிப்பைக் கண்டோம்

வாழ்க்கைப் படகு ஏறிய போது
புயலைக் கண்டோம்

அழகிய வாழ்வில் இன்னல்
பல இடர்படக்கண்டோம்

வாழ்ந்து பார்த்தோம்
வாழ்க்கையே வேசமானது

எஸ்,நிலாமணி,
மண்டைதீவு.

## மௌனத்தின் தேடல்- 551



## மானிடமே சிந்தை கொள்ளாயோ?

பெண்மையின் பெருமைகள்
புரிந்திடா உலகம் இதுவா
வன்மையின் கொடுமையில்
வதைபடும் வனியதையருக்கு
வாழ்வில் நிம்மதி நிறைந்திட
நீதி வழி நிலைத்திடனும்

தங்கத்தமிழன், காரைநகர்.

## பேடி நீ!

தாயின் கருவறைக்கும்
ஈசன் கருவறைக்கும்
வாசல் ஒன்றே கோவிலில்
விக்கிரகம் தாயினில்
மகவும் எனில் இறையிலும்
ஈன்றவளே மேலாம் இனும்
உணரா மானுடமே வீரம்
பெண்ணிடமா பேடி நீ!
பிணமாகவல்லா வாழுகின்றாய்!

வானிசன்
நாரந்தனை.

## பெண்ணை மதி

பெண்ணின் பெருமை வெறும்
பேச்சினில் மட்டுமா இம்
மண்ணில் பெண்கள் படும் இன்னல்
கண்டும் காணாதது போல
நடமாடும் மானிடரே
பெண்களைத் துன்பப்படுத்தி
பெருமை கொள்ளும் பித்தர்களே-உம்
அன்னையின் கண்ணில் நீர் வடிந்தால்
அடுக்குமா உன் மனம் கூறுங்களே
அன்னையாக அக்கா தங்கையாக
அன்புடன் பெண்களை நீர் மத்தித்தால்
அகிலத்தில் அகன்றிடும் பெண்ணடிமை
அன்பான உலகைக் கண்டிடலாம்

சி.கஜா,
முரசுமோட்டை.

## இனும் போற்றாப்...

பெண்மையின் கடைசி ஆசை
கணவனிடம் ஒரு முளப் பூ
பெற்ற மகவிடமோ ஒரு
கங்குல் தீ பிறந்தகத்தில்
இருந்து ஒரு முள கோடி மட்டும்
இப்பிறப்பை எப்படி நீ வதைப்பாய்
ஏய்! மானுடமே பெண்மை
இனும் போற்றப் பேதையரா?

க.சிவமணி, நல்லூர்.

## துணிந்து நில்

கொஞ்சி மகிழும் அழகு முகம்
கெஞ்சி அஞ்சி நிற்கிறதே
மென்மையை தாக்கும் வன்மை
சமபலம் பெண்ணுக்கு இருப்பின்
அவள் கையும் நீளாதோ
ஏ! பெண்ணே! கராட்டியும் கலைகளும் கற்று
துணிந்து எதிர்த்து நில்
பெண்ணினம் நிமிர்ந்து நிற்கும்
[illegible]

ம.திருவரதராசா,வவுனியா.

## மௌனத்தின் தேடல்- 552



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## இத்தரையில் இனி வேண்டாம்...

போதை பித்தேறி மதுவை பிய்த்தெறிந்த
காமுகக் கயவர்களின் மமதை என்ன...
நெறி கெட்ட வெறிச் செயலின்
(தறு) தலைகளை - இனி நறுக்கி எறிவதே
நாகரீகச் செயல் காமுகக் கயவர்கள்
இத்தரையில் இனி வேண்டாம்...

ச.துஸ்யன்
(அத்தியடி),யாழ்ப்பாணம்

## அடங்காமை

அடக்கமிழந்தால்
அன்பை இழப்பாய்-என
பெற்றார் கூறிய மொழி
மறுதளித்துவிட்டதே!
அடங்கும் மடந்தையே
ஆண்மையால் அழிகிறாள்

சு.சுருத்திகா,
புன்னாலைக்கட்டுவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**விசாரணையில் கூட வந்தவர்களை தாராளமாகக் காட்டிக் கொடுத்தார்கள். படகில் வந்தபோது, கூடக் குறைய சொந்த நாட்டின் போர் அனுபவம் பற்றிப் பேசியவர்கள், புலிகள் என்று காட்டிக்கொடுக்கப்பட்டார்கள்.**

## வலி சொல்லும் தொடர்... 22



ஜூனியர் விகடன்

அவுஸ்திரேலியா நோக்கி இரண்டாயிரத்தின் இறுதியில் படையெடுத்துக்கொண்டிருந்த படகுகளால், அப்போது ஆட்சியிலிருந்து லேபர் அரசாங்கம் மிரண்டது. சட்டவிரோதக் குடியேற்றவாசிகளை நாட்டுக்குள் அனுமதிக்கிற அரசாங்கம், இதற்கு மேலும் பதவியிலிருக்க வேண்டுமா? என்று எதிர்க்கட்சியான லிபரல், நாட்டு மக்களின் முன்பாக லேபரை செவியில் பிடித்து ஆட்டியது.

இதற்கு பதில் கொடுப்பதற்காக, லேபர் அரசாங்கம் படகில் வந்த அகதிகள் பலரை, தனது பொல்லாத அரசியல் கொள்கையொன்றுக்கு பலிகொடுப்பதற்குத் துணிந்தது.

அதாவது, ஒரு காலகட்டத்தில் அவுஸ்திரேலியாவை நோக்கி வந்த படகுகள் ஒவ்வொன்றிலிருந்தும் ஓரிரு அகதிகளை, சந்தேக நபர்களாகத் தெரிவு செய்தது. அவர்களைச் சொந்த நாட்டில் சட்டவிரோத காரியங்களில் ஈடுபட்டவர்கள் என்று முத்திரை குத்தியது. அவர்களது தஞ்சக் கோரிக்கை விண்ணப்பத்தை அவுஸ்திரேலிய புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைத்து, அவுஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்கலாமா என்று கருத்துக் கேட்டது.

அதாவது, 'அவுஸ்திரேலியாவின் பாதுகாப்புக்குப் பங்கம் விளைவிக்கக்கூடியவர்கள்' என்ற கோதாவில், இந்த அகதிகள் பட்டியல் படுத்தப்பட்டார்கள்.

'இவர்களை அவுஸ்திரேலியாவுக்குள் அனுமதித்தால், அவுஸ்திரேலிய சமூகத்துக்கு ஆபத்து' - என்று விளக்கம் கூறியது. இவர்களில் பலர் ஏற்கனவே அகதிகள் என்று ஐக்கிய நாடுகள் அகதிகள் ஸ்தாபனத்தில் உறுதிப்படுத்தப்பட்டவர்கள். ஆகவே, இவர்களைச் சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்ப முடியாது. அதேவேளையில், அவுஸ்திரேலியாவுக்குள்ளேயும் அனுமதிக்க முடியாது.

இப்படிப்பட்ட கொடூரமான முடிவை எடுத்துக்கொண்டதன் மூலம், தனது எல்லைப் பாதுகாப்புக் கொள்கையை அவுஸ்திரேலிய மக்களிடம் விளம்பரம் செய்தது மாத்திரமல்லாமல், "லேபர் என்ற பெயரைக் கேட்டாலே அதிருதில்ல..." - என்று எதிர்க்கட்சியையும் பார்த்து எக்காளம் செய்துகொண்டது.

இலங்கையிலிருந்து வந்த படகில் இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட, சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் 'அவுஸ்திரேலியாவுக்கு அச்சுறுத்தலானவர்கள்' என்று முத்திரை குத்தப்பட்டார்கள்.

இவர்கள் உண்மையிலேயே, குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களா? என்பது அவுஸ்திரேலிய அரசுக்குத் தெரியுமோ இல்லையோ, இவர்களது படகில் வந்தவர்களே குடிவரவுத் துறையினரின் விசாரணையில், கூட வந்தவர்களை தாராளமாகக் காட்டிக் கொடுத்தார்கள். படகில் வந்தபோது, கூடக்குறைய சொந்த நாட்டின் போர் அனுபவம் பற்றிப் பேசியவர்கள், புலிகள் என்று காட்டிக்கொடுக்கப்பட்டார்கள்.

அவுஸ்திரேலியப் புலனாய்வுத் துறையினரைப் பொறுத்தவரை, பயங்கரவாதப் பின்னணியுடன் வருபவர்களுக்கு அடுத்ததாக, அகதிகளின் படகுகளை ஓட்டி வந்தவர்களைத்தான் தேடித் தேடிப் பிடித்து, "நாட்டுக்கு அச்சுறுத்தலானவர்கள்" என்று முத்திரை குத்தினார்கள்.

அவுஸ்திரேலியா வருகிற படகில் ஏறும்போது, சகல அகதிகளுக்கும் சொல்லப்படும் கடுமையான உத்தரவு, "ஓட்டி யார் என்று, யார் கேட்டாலும், எப்போதும் சொல்லப்படாது" அவ்வளவுதான்.

கடல் தாண்டி, பெரும் தேசமொன்றுக்கு வழிகாட்டி அழைத்துப்போகின்ற ஓட்டி எனப்படுபவன், படகில் வருகின்ற அனைவருக்கும் ஒரு கடல் தெய்வம். [illegible] வதற்கு [illegible]

மனிதாபிமானம் உள்ள எவனும், கரை சேர்ந்தவுடன் ஓட்டியைத்தான் கையெடுத்துத் தொழுவான்.

ஆனால், அவுஸ்திரேலியப் பாதுகாப்புத் தரப்பினர், ஓட்டியைக் காட்டித் தருபவர்களுக்கு துரிதமாக விசா தரலாம் என்றும், இன்னும் பல புன்னகைக்கும் சத்தியங்களையும் எலும்புகளாகக் கண் முன்னால் ஆட்டிக்காட்டியபோது, எத்தனையோ ஓட்டிகளை துரோகம் பச்சையாகச் சப்பித் தின்றது. விசா வழங்கி அவுஸ்திரேலியாவுக்குள் அனுமதிக்கப்பட்டவர்களே, அவுஸ்திரேலியத் தரப்பினர் மீண்டும் அழைத்து விசாரிக்கும்போது, தடுப்பு முகாம்களுக்கு வந்து பணத்துக்காக ஓட்டிகளைக் காட்டிக்கொடுத்தார்கள்.

படகுப் பயணம் என்பது, தனியே கடலோடு மாத்திரம் முடிவடைந்து விடுவதில்லை. படகுப் பயணத்துக்கு கடல் மாத்திரம் எதிரி என்று முடிந்து விடுவதுமில்லை. ஒரு படகு, கரையைச் சேரும்போது, அது ஒரு தொகை அகதிகளோடு, அவர்களது புதிய குழப்பங்களையும்தான் கும்பலாகக் கரையில் தள்ளி விடுகிறது.

அகதிகளும் சராசரி மனிதர்கள் தானே என்பதற்கு அப்பால், அவர்கள் வழி நெடுகிலும் அனுபவித்து வந்த வலிகளும் அவற்றின் நீட்சியும், கூட வந்தவர்கள் பலரை, ஆயுளுக்கும் மாற்ற முடியாத மன வடுக்களால் வெட்டிச் சாய்த்திருக்கின்றன.

இந்த வரிசையில், நீதனும் மிகத் [illegible] அவுஸ்திரேலிய குடிவரவுத் [illegible]த்திடம் சிக்கினான்.

அவன் காட்டிக்கொடுக்கப்பட்டானா? அல்லது இந்தோனேசியாவிலிருந்து பெற்றுக் கொண்ட தகவலின் அடிப்படையில், அவனது விபரங்களை அவுஸ்திரேலிய புலனாய்த்துறையினர்தான் கண்டுபிடித்தார்களா? என்பது தெரியவில்லை.

ஆனால், இலங்கையில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலுக்கு உதவியவன் என்ற குற்றச்சாட்டில், அவனை அவுஸ்திரேலியப் புலனாய் வுத்துறையினர், திட்டமிட்டபடி அடுத்த வாரம் சந்திப்பதற்கு மெல்பேர்ன் அகதிகள் முகாமுக்கு வந்தனர்.

இரண்டாவது குழந்தை பிறந்ததுடன், கூடவே பெரியதொரு சிக்கலும் வந்திருப்பதாக, புலனாய்வுத் துறையினருடனான சந்திப்புக்குப் போவதற்கு முதல்நாள் இரவு 'அல்பா கம்பவுண்ட்' வெளி விறாந்தையில் வைத்து எனக்குச் சொன்னான்.

இரண்டு மூன்று சிகரெட்டுகளை அடுத்தடுத்துப் பற்றினான். பதற்றத்தோடு சிகரெட் அடிக்கட்டையை நசித்தான். என்னுடன் தனது பெரியதொரு வரலாற்றைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பது போல, அன்றிரவு நடுநிசி வரைக்கும் தடுமாறியவன், ஒருவாறு இரண்டு பிளெயின் டீக்களோடு வந்து கதையைத் திறந்தான்.

சமாதானம் உதிரத் தொடங்கியிருந்த இரண்டாயிரத்தின் ஏதோவோர் ஆண்டொன்றில், கிளிநொச்சியிலுள்ள அலுவலகம் ஒன்றில் வைத்து, அவளை நீதன் கடைசியாகக் கண்டிருந்தான்.

புலனாய்வுத் துறையின் கொழும்புக்கான பொறுப்பாளர் ராகவன் மாஸ்டரின் முன்பாக அழைக்கப்பட்டிருந்த விசாரணைக்காகப் போனபோது, அவள் அப்போது அந்த அலுவலகத்தைவிட்டு வெளியேறியதை நீதன் கண்டான்.

அவ்வளவுதான் அதற்குப் பிறகு அவளை எங்கும் காணவுமில்லை. அவளோடு எந்தத் தொடர்பும் இல்லை.

அந்தச் சந்திப்புக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு, கிளிநொச்சியிலிருந்து, தலைநகர் கொழும்புக்கு அவள் கொண்டுவரப்பட்டிருந்தாள்.

ஓட்டோ ஒன்றில் கூட்டிவந்து, ஜம்பட்டா வீதியில் வைத்து, அவளை நீதனிடம் ஒப்படைத்துவிட்டுச் சென்றிருந்தான் கானகன். கொழும்பு தொடர்புகளுக்காக அவ்வப்போது வன்னியிலிருந்து வந்துபோகின்றவன் கானகன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா

## உருண்டது நான்கு, புரண்டது?




பிரசித்தியால் விளைவது ஆபத்தே என்ற தத்துவத்தைச் சுட்டிக் காட்டியதன்றி அதற்குத் தக்க சான்று தரும் முறையில், "சந்தேகமிருந்தால் திரும்பிப் பாருங்கள்' என்று சர்வ சகஜமாகக் கூறிய கோட்டைத் தலைவன் சொற்களைத் தொடர்ந்து தனது ஆசனத்திற்குப் பின்புறம் தலை திரும்பிப் பார்த்த இளைய பல்லவன், அங்கு உருவிய வாள்களுடன் நின்றிருந்த இரு வீரர்களைக் கண்டதும் அவர்களை ஒரு முறை ஏற இறங்க நோக்கிவிட்டு மீண்டும் ஆசனத்தில் திரும்பி எதிரேயிருந்த கோட்டைத் தலைவனை மிக இன்பமான புன்முறுவல் படர்ந்த வதனத்துடனும், அந்தப் புன்முறுவலை விஷமச் சிரிப்பாக உதிர்த்த கண்களுடனும் நோக்கினான்.

அத்தகைய மந்தகாச வதனத்தையும், ஆபத்தைக் கண்டும் இளையபல்லவன் பார்வை மூலமே உணர்த்திய அலட்சியத்தைக் கண்ட கோட்டைத் தலைவன் பெரும் வியப்புக்குள்ளானான். அந்தத் தனது அந்தரங்க அறையில் வந்த சில பிரசித்தி பெற்ற கொள்ளைக் காரர்கள் மறைந்து மடிந்த விவரங்களை எடுத்துச் சொல்லி, படிப்படியாக அச்சத்தை உயர்த்திக்கொண்டே போய், அவற்றுக்குச் சிகரம் வைத்தது போல் லேசான சமிக்ஞையினாலேயே உருவிய வாள்களுடன் காவலரை வரவழைத்துக் காட்டியும் அதைப்பற்றி லவலேசமும் கவலைப்படாமல் தன்னைப் பார்த்து வாய்விட்டு நகைக்காவிட்டாலும் கண்களின் பார்வையால் நகைத்த படைத் தலைவன் மீது ஆச்சரியம் ததும்பும் விழிகளை நிலைக்கவிட்டான் அக்ஷயமுனைக் கோட்டையின் தலைவன்.

அந்த ஆச்சரியத்துடன் சிறிது சிந்தனையும் அவன் சித்தத்தில் எழுந்ததற்கு அறிகுறியாகப் புருவங்கள் சிறிது மேலே ஏற மூன்று வரிக்கோடுகள் பக்தர்களின் கீற்றுச் சந்தனம் போல் அவன் முகத்தில் விழுந்தன. இம்முறை இளையபல்லவன் பிரமிப்பு பன்முறை அதிகமாயிற்று, இதே மூன்று கோடுகளை அவன் பாலூர்ப் பெருந்துறையின் வெளிநாட்டுப் பிரமுகர் வீதியிலிருந்த மாளிகையில் முதல் நாள் இரவு கண்டிருந்தான்.

அந்த மூன்று வரிகள் முகத்தில் உதயமானதும் அந்த அயோக்கியன் எப்படி சாட்சாத் குணவர்மன் போலவே காட்சியளித்தான் என்பதை நினைத்து விவரிக்க இயலாத ஆச்சரியத்தின் வசப்பட்டான் இளைய பல்லவன். அதிலிருந்து ஒரு முக்கிய உண்மையும் வெளியாயிற்று சோழர் படை உபதலைவனுக்கு "குணவர்மனுக்கு அந்த மூன்று வரிக் கோடுகள் கவலை உழுது விட்ட சின்னங்கள். ஆனால் படாடோபத்திலும் கொள்ளைக்காரர் கொண்டு குவித்த பணத்திலும் காலங் கழிக்கும் இவனுக்கென்ன கவலையிருக்க முடியும்?" என்று எண்ணிப் பார்த்த இளையபல்லவன், சாந்திக்கும் பணத்துக்கும் படாடோபத்துக்கும் சம்பந்தமில்லை. சாந்தியை அளிக்கும் அம்சமே. வேறு." என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

தவிர அதுவரை தன் எண்ணங்களையோ, குறைகளையோ காட்டாமல் சமாளித்துக் கொண்ட கோட்டைத் தலைவன், அபாயத்தின் முனையிலும் தான் அலட்சியம் காட்டியதைப் பார்த்து வெளிக்கு வியப்பையும் உள்ளுக்குள் கவலையையும் எய்திவிட்டதை நினைத்த இளையபல்லவன், 'மேலுக்கு மிகவும் துணிவுள்ள வனாகத் தெரியும் இவன் துணிவு உண்மையானதல்ல, வஞ்சகத்தின் துணை கொண்டது. ஆகவே வயிரம் பாயாது, என்று உள்ளத்தே தீர்மானித்துக் கொண்டான். இப்படிக் கோட்டைத் தலைவனின் பளாபலத்தை எடை போட்டுவிட்ட இளையபல்லவன் நன்றாகத் தனது ஆசனத்தில் சாய்ந்துகொண்டு கால்களையும் சாவதானமாக நீட்டிக் கொண்டான்.

தனது அந்தரங்க அறைக்கு இளைப்பாறவே வந்தவன் போல் இளையபல்லவன் ஆசுவாசப்படுத்திக் கொள்வதைக் கண்ட கோட்டைத் தலைவன் அவன் நிதானத்தையும் நெஞ்சுரத்தையும் கண்டு மேலும் மேலும் வியப்புக்கும், இத்தகையவன் அக்ஷயமுனையில் காலூன்றினால் தனக்கு ஏற்படக்கூடிய பலவீனத்தை நினைத்துக் கவலைக்கும் உள்ளானாலும் அந்த உணர்ச்சிகளை வெகு சிக்கிரம் மறைத்துக் கொண்டான். கொள்ளைக்காரர்களின் பணத்தாசையும் சில்லறை இன்பங்களில் அவர்களுக்கிருந்த வெறியுமே தன் சக்தியென்பதையும், அறிவாளி எவனை விட்டாலும் பல திசைகளில் தனக்கு ஆபத்து உண்டென்பதையும் உணர்ந்ததாலேயே ஏற்கெனவே பல அறிவாளிகளை அவன் தீர்த்துக் கட்டியிருந்தான். அவர்கள் பிரதாபங்களையும் தலைகளையும் பட்டயங்களில் வரைந்து அந்தரங்க அறையில் பதித்திருந்ததற்குக் காரணம், அந்த அறைக்கு வருபவர்கள் ஆரம்பத்திலேயே நடுக்கம் கொள்ளட்டும் என்பதுதான்.

அப்படி ஏற்கெனவே பலர் நடுங்கியும் இருக்கிறார்கள். படங்களைப் பார்த்தும் தான் ஆபத்தைச் சுட்டிக் காட்டியும், இரு வீரர் வாள் பிடித்து நின்றும் அசையாத துணிவு கொண்ட ஒருவன் தனது கோட்டைக்கு வந்து விட்டான் என்ற நினைப்பு மட்டுமின்றி, அவன் பெரும் அறிவாளியும் ராஜதந்திரியுங்கூட என்ற எண்ணமும் கோட்டைத் தலைவனுக்குப் பெரும் கவலையை அளித்தன. அத்தகையவனை ஒழிப்பதானாலும் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்ள வேண்டுமென்பதையும் உணர்ந்துகொண்ட கோட்டைத் தலைவன், உள்ளூர இருந்த உணர்ச்சிகளை மறைத்து இளைய பல்லவனை நோக்கி மகிழ்ச்சிப் புன்முறுவலும் கொண்டான். அத்துடன் பாராட்டவும் முற்பட்டு, "உங்கள் துணிவைப் பற்றி ஏற்கெனவே கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்று என் கோட்டையில் நேரில் கண்டேன் என்றான்.

வாள் வீரர் இருவரை அவன் வரவழைத்தது தன்னை வெட்டிப் போட, அல்லது சிறையில் தள்ள என்பதை உணர்ந்திருந்த இளைய பல்லவன், கோட்டைத் தலைவன் திடீரெனத் தன் துணிவைப் பாராட்ட முற்பட்டதில் ஆழ்ந்த கருத்து ஏதோ இருக்க வேண்டுமென்ற எச்சரிக்கையுடனேயே பதிலும் சொன்னான் "உங்கள் பாராட்டுதலுக்கு நன்றி. ஆனால் துணிவு எதையும் நான் காட்ட வில்லையே.

"கோட்டைத் தலைவன் இதழ்களில் இருந்த புன் முறுவல் மேலும் விகசித்தது. "என்ன! துணிவைக் காட்ட வில்லையா?" என்று வினவினான் குரலில் வியப்பு ஒலிக்க.

"இல்லை." என்றான் இளைய பல்லவன் சகஜமாக.

"இந்தச் சுவரிலுள்ள பட்டயங்களைப் படிக்க வில்லையா?" என்று மறுமுறை வினவினான் கோட்டைத் தலைவன்.

"படித்தேன்." இந்தப் பதிலும் சம்பிரதாய முறையில் நிதானமாக வந்தது.

"இவை மாண்டவர்கள் பட்டயங்கள்.

"ஆம்.

அவற்றிலேயே குறிப்புகளிருக்கின்றன.

"இந்த அறைக்கு வந்ததும் மறைந்தவர்கள்.? "அதை நீங்களே கூறினீர்கள்.

"அவர்களை நான் ஏன் கொன்றிருக்கக் கூடாது?"

"கொன்றிருக்கலாம்!"

"கொன்றிருக்கலாமா! அதிலும் சந்தேகமா?"

"ஆம். அவசியமிருந்தால் கொன்றிருப்பீர்கள். அவசிய மில்லாவிட்டால் ஏன் கொல்ல வேண்டும்?"

இளையபல்லவனின் இந்தக் கடைசிக் கேள்வியும், அது வெளியிடப்பட்ட போதிருந்த தொனியும் முக பாவமும் கோட்டைத் தலைவனை ஓர் உலுக்கு உலுக்கின. தான் கொலை செய்ததைக் கிட்டத்தட்ட சரியென்று இளையபல்லவன் ஒப்புக்கொள்வதைக் கவனித்த கோட்டைத் தலைவன் இயத்தில், 'நம்மைவிட இவன் பெரிய கொலைகாரனோ?' என்ற சந்தேகம் உதயமாயிற்று. இருப்பினும் அதை வெளிக்குக் காட்டாமல், "கொலையை ஒப்புக்கொள்கிறீர்களா?" என்று வினவினான்.

ஆம். "நீங்களும் கொலை செய்வீர்களா?"

"எவ்வளவோ பேரைக் கொன்றிருக்கிறேன்.

"அவசியத்தாலா?"

"அவசியமில்லாமல் நான் எதையும் செய்வதில்லை. உதாரணமாக..." என்று மெள்ள இழுத்தான் இளைய பல்லவன் கண்களைச் சற்றுக் கீழே தாழ்த்திய வண்ணம்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வலிமை திரைவிமர்சனம்

போதைப் பொருள். தவறான சில இளைஞர்கள், அவர்களை வழி நடத்த ஒரு தலைவன், அவர்களைக் கண்டு பிடிக்க முயலும் ஒரு காவல் துறை அதிகாரி இதுதான் "வலிமை". தமிழ் சினி மாவில் பல்வேறு காலங்களில் பல்வேறு விதமாக சொல்லப்பட்ட ஒரு கதையைத் தான் இயக்குனர் வினோத் இந்தப் படத்திலும் கொடுத்திருக்கிறார். அதை எப்படி கொடுத்திருக்கிறார் என்பதுதான் கேள்வி.

கொலம்பியாவிலிருந்து கடல் வழியாக போதைப் பொருளை ஒரு கும்பல் வழக்கமாகக் கடத்துகிறது. அவர்களிடமிருந்து போதைப் பொருளைக் கொள்ளையடித்து இங்கு இளைஞர்கள் மூலம் விற்கும் வில்லன் கார்த்திகேயா. வெறும் போதைப் பொருளை மட்டும் கடத்தாமல், செயின் பறிப்பு, ஆட் கள் கொலை என்று "டார்க் வெப்" மூலம் செய்கிறது கார்த்திகேயா தலைமையிலான கும்பல். சென்னைக்குப் புதிதாக பொறுப்பேற்கும் உதவி கமிஷனரான அஜித்குமார் அந்த கும்பலைக் கண்டுபிடிக்க முயற்சிக்கிறார். அதில் அவர் வெற்றி பெற்றாரா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

ஸ்மார்ட்டான உதவி கமிஷனராக அஜித்குமார். அவர் நடந்து வந்தாலே போதும் அவருடைய ரசிகர்கள் தியேட்டர்களில் கொண்டாடு வார்கள். இதிலும் அவ்வப்போது அப்படியே நடந்து வருகிறார், பன்ச் டயலாக் பேசுகிறார். எதிரிகள் பற்றியும், சிஸ்டம் பற்றியும், குடும்பம் பற்றியும் கிடைக்கும் கேப்புகளில் அட்வைஸ் செய்கிறார். இந்தப் படத்தில் இவற்றை மீறி அவர் செய்யும் ஆக்ஷன் காட்சிகள் ரசிகர்களிடம் ஆஹா.. ஆஹா..என சொல்ல வைக்கிறது. தன்னுடைய ரசிகர்களை முழுதாகத் திருப்திப்படுத்தினால் போதும் என நினைத்து அதைச் செய்துள்ளார்.

படத்தின் கதாநாயகி என்று சொல்ல முடியாத ஒரு கதாபாத்திரத்தில் ஹுமா குரேஷி. போதைப் பொருள் தடுப்புப் பிரிவில் ஒரு முக்கிய அதிகாரி. ஆரம்பத்தில் ஒரே ஒரு காட்சியில் அஜித்திடம் என்னை "கட்டிக் கொள்வதுதானே" எனக் கேட் கிறார். நல்ல வேளையாக தெலுங்குப் படம் போல அங்கு டூயட் போடவில்லை. இவரும் அஜித்தும் காதலர்களா என்ற விளக்கத்திற்கெல்லாம் இயக்குனர் போகவேயில்லை.

நாயகன் அஜித் அளவிற்கு வில்லன் கார்த்திகேயாவிற்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். அவரின் அறிமுகக் காட்சியிலேயே சிக்ஸ் பேக்குடன் [illegible] முகத் [illegible] அஜித்திற்கு சரியான "டப்" கொடுக்கி றார். இப்படியான இளம் மிரட்டல் வில்லன்கள் தமிழ் சினிமாவில் இல்லை. விருப்பமிருந்து இதைத்தொடர்ந்தால் கார்த்திகேயா அந்த இடத்தை நிரப்பலாம்.

ஆக்ஷன் மட்டும் இருந்தால் அஜித் ரசிகர்களை மட்டும்தான் திருப்திப்படுத்த முடியும் என்று அம்மா, அண்ணன், தம்பி சென்டிமென்ட் வைத்திருக்கிறார்கள். இஞ்சினியரிங் முடித்த தம்பி ராஜ் ஐயப்பாவுக்கு வேலையில்லை, அவரைப் பலரும் அவமானப்படுத்துகிறார்கள் என்று ஆரம்பக் காட்சி வரும் போதே அவர் வில்லன் கூட்டத்தில் சேர்ந்து விடுவார் என்று யூகிக்க முடிகிறது. அம்மா சுமித்ரா, அண்ணன் அச்யுத் குமார் சில காட்சிகளில் வந்து போகிறார்கள். நாயகனுக்கு உதவி செய்யும் கமிஷனராக செல்வா, வில்லனுக்கு உதவி செய்யும் இணை கமிஷனராக சுந்தர் என தமிழ் சினிமாவில் பல படங்களில் பார்த்த பாத்திரங்கள், மாற்றி யோசித்திருக்கலாம்.

படத்தின் முடிவில்தான் கலைஞர்களின் டைட்டில் வருகிறது. இசை யுவன் என்றும், நன்றி ஜிப்ரான் என்றும் போட்டு சமாளித்திருக்கிறார்கள். யுவன்தான் பின்னணி இசை அமைத்தாரா? என்பதை சம்பந்தப்பட்டவர்கள்தான் சொல்ல வேண்டும். யுவன் இசையமைத்த அம்மா சென்டி மென்ட் பாடலை கிளைமாக்ஸ் முடிவில் போடுகிறார்கள். இடையில் வரும் அம்மா பாடல் ஜிப்ரான் இசையமைத்ததா என்பதும் தெரியவில்லை. இசையில் ஏன் இத்தனை குழப்பம். பைக் சேசிங் காட்சிகளை ஒளிப்பதிவாளர் நீரவ் ஷா எப்படி படமாக்கியிருப்பார் என்று வியக்க வைக்கிறது. தமிழ்ப் படங்களில் இதுவரை இப்படி ஒரு ஸ்டன்ட் காட்சிகள், சேசிங் காட்சிகளைப் பார்த்ததில்லை என்று தாராளமாகச் சொல்லலாம். ஸ்டன்ட் இயக்குநர் திலீப் சுப்பராயனுக்கும், அவரது குழுவினருக்கும் இந்தப் பெருமை முழுமையாகச் சேரும். இடைவேளை வரை படத்தை பரபரப்பாகவும், விறுவிறுப்பாகவும், அடுத்து என்ன நடக்கும் என்ற ஆவலுடனும் திரைக்கதை அமைத்து இயக்கியிருக்கிறார் வினோத். இடைவேளைக்குப் பிறகு முதல் பாதியை விட இன்னும் மிரட்டலாக இருக்கும் என்று எதிர்பார்த்து காத்திருந்தால் அந்த எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யவில்லை. வழக்கமான தமிழ்ப் படங்களைப் பார்ப்பது போலத்தான் இருக்கிறது. அதையும் முதல் பாதி போல அதிக கவனம் செலுத்தி இன்னும் வித்தியாசமாக எடுத்திருக்கலாம்.

இருப்பினும் அஜித் ரசிகர்களைத் திருப்திப்படுத்தும் படமாக இருக்கிறது. "விவேகம்" படத்தை விட மேலாகவும், "விஸ்வாசம்" படத்தை விட கொஞ்சம் கீழாகவும் இருக்கிறது இந்த "வலிமை".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : மூன்று தெய்வங்கள்
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : பி.சுசீலா



வசந்தத்தில் ஓர்
நாள் மணவறை ஓரம்
வைதேகி காத்திருந்தாளோ
தேவி வைதேகி காத்திருந்தாளோ

வசந்தத்தில் ஓர்
நாள் மணவறை ஓரம்
வைதேகி காத்திருந்தாளோ
தேவி வைதேகி காத்திருந்தாளோ
தேவி வைதேகி காத்திருந்தாளோ

மையிட்ட கண்ணோடு
மண் விளையாட மையிட்ட
கண்ணோடு மண் விளையாட
மௌனத்தில் ஆழ்ந்திருந்தாளோ
தேவி தேவர்கள் யாவரும் திருமண
மேடை தேவர்கள் யாவரும் திருமண
மேடை அமைப்பதை
பார்த்திருந்தாளோ தேவி

திருமால் பிரம்மா
சிவன் என்னும் மூவர் காவலில்
நின்றிருந்தாளோ தேவி காவலில்
நின்றிருந்தாளோ தேவி வைதேகி
காத்திருந்தாளோ

வசந்தத்தில் ஓர் நாள்
மணவறை ஓரம் வைதேகி
காத்திருந்தாளோ தேவி
வைதேகி காத்திருந்தாளோ

பொன்வண்ண மாலை
ஸ்ரீராமன் கையில் பொன்வண்ண
மாலை ஸ்ரீராமன் கையில்
மூவரும் கொண்டு தந்தாரோ
அங்கே

பொங்கும் மகிழ்வோடு
மங்கள நாளில் பொங்கும் மகிழ்வோடு
மங்கள நாளில் மங்கையை வாழ்த்த
வந்தாரோ அங்கே சீருடன் வந்து
சீதனம் தந்து சீருடன் வந்து சீதனம்
தந்து சீதையை வாழ வைத்தாரோ
தேவி வைதேகி காத்திருந்தாளோ
தேவி வைதேகி காத்திருந்தாளோ

வசந்தத்தில் ஓர்
நாள் மணவறை ஓரம்
வைதேகி காத்திருந்தாளோ
தேவி வைதேகி காத்திருந்தாளோ
தேவி வைதேகி காத்திருந்தாளோ

# ஆறுமுகத்தில் ஒரு முகமே ஈழத் தமிழரின் புது முகம்

**சொந்த மக்களின் அழுகுரல் என்று தன் சொந்த ஆன்மாவுக்குள் எதிரொலிக்கின்றதோ அன்றே முருகனின் ஆறுமுகத்தில் ஓர் முகம் அறிவு ரீதியாக, சிந்தனை ரீதியாக ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இளம் தலைமுறையினரிடம் இருந்து ஈழத் தமிழரின் ஆணைப்படி தோன்றி விட்டதென அர்த்தம் கொள்ளப்படும்.**

மத்திய கிழக்கினுடைய அமெரிக்காவின் முகமாக இஸ்ரேலியர்கள் எழுச்சி பெற்றிருப்பது போல், தென்னாசியாவினுடைய இந்தியாவின் முகமாக எதிர்காலத்தில் இலங்கைத் தீவில் வாழும் ஈழத் தமிழர்களும் எழுச்சி பெற வேண்டும். அவ்வாறு அவர்கள் எழுச்சி பெற்றால்தான், தேசிய அரசியலில் அவர்கள் தங்களின் உரிமையை எப்போதும் தங்களுடைய சொந்த மண்ணில் ஒரு நிரந்தர அரசியல் தீர்வின் ஊடாக நிலை நாட்ட முடியும்.



எப்போதும் சிங்கள பௌத்த பேரினவாத அரசோடு ஈழத் தமிழர்கள் இணங்கியிருப்பதை காட்டிலும், பிராந்திய அரசான இந்தியாவோடு இணங்கியிருப்பதே இந்திய தேசிய நலனில் ஈழத் தமிழர்களும் பங்காளி ஆவதற்கான ஒரு அரசியல் இராஜதந்திரம் மறைந்து போயுள்ளதை புத்தி சாதுர்யத்தால் இந்தியாவும் எதிர்கால ஈழத் தமிழ் அரசியல் தலைமையும் ஒரு புள்ளியில் வைத்து உணரும் பட்சத்தில் இந்தியாவின் முகமாக ஈழத் தமிழர் எதிர்காலத்தில் மாறுவதற்கான வாய்ப்பை எந்த புற அரசியல் சூழலும் தடுத்து விட முடியாது.

இந்தியாவின் முகமாக ஈழத் தமிழர்கள் எதிர்காலத்தில் பேரெழுச்சி பெற வேண்டும் என்றால், ஈழத் தமிழர்களுடைய தமிழ் அரசியல் தலைமைத்துவத்தின் தலைமை சமகால சர்வதேச, பிராந்திய அரசியல் சூழலிற்கு ஏற்ப புதிய சிந்தனை மாற்றம் கொண்ட அல்லது புதிய அறிவு மாற்றம் கொண்ட ஒரு புது முகத் தலைவரை தேர்ந்தெடுப்பதே, ஈழத் தமிழ் அரசியல் தலைமையின் முன்னால் உள்ள ஒரு மாபெரும் தடையாகும்.

முற்றிலும் தன்னை தமிழனாக உணர்ந்த ஒருவரே ஈழத் தமிழர்களின் சிறந்த ஜனநாயகம் பொருந்திய அரசியல் தலைவராக இருக்க முடியும் என்பதை சமகாலத்து சிந்தனை மாற்றம் கொண்ட ஏராளமான ஈழத்து இளம் தலைமுறையினர் அதிகமாக நம்புகின்றார்கள். அந்த நம்பிக்கையினுடைய தாக்கமே எதிர்கால ஈழத் தமிழ் ஜனநாயக அரசியலை உலக அரசியல் ஒழுங்கிற்கு ஏற்ப செதுக்கப் போகும் பலம் வாய்ந்த பிரமாஸ்திரமாகும்.

இனவாதம், மதவாதம், யுத்த வெற்றிவாதம் என்ற பேரினவாத பேரலையில் அடிபட்டுக் கொண்டிருக்கும் சிங்கள பௌத்த சகோதரர்களின் சிந்தனைகளை அடியோடு மழுங்கடிக்கக் கூடிய, எதிர்காலத்தில் இந்தியாவின் முகமாக ஈழத் தமிழர்களை நிலை நிறுத்தக் கூடிய, ஒரு மதிநுட்பம் வாய்ந்த அல்லது அரசியல் இராஜதந்திர வியூகங்களை வகுத்து அதில் வெற்றி பெறக் கூடிய, ஓர் ஈழத் தமிழ் அரசியல் தலைவரை எங்கே போய்த் தேடுவது...? என்ற கேள்வி ஈழத் தமிழர்களின் மனங்களில் தற்சமயம் ஆர்ப்பரிக்கத் தொடங்கியுள்ளது.

ஈழத் தமிழ் இளம் தலைமுறையினரிடம் இருந்தே நாம் அந்த அரசியல் தலைவரை தேட முற்பட வேண்டும். உலகத்தின் போக்கிற்கு ஏற்ப வளைந்து கொடுக்காமல். உலகை தன் போக்கிற்கு ஏற்ப வளைத்து எடுத்து இந்தியாவின் முகமாக ஈழத் தமிழரை எதிர்காலத்தில் மாற்றக் கூடிய ஒரு ஜனநாயக அரசியல் தலைவரை இளம் தலைமுறையினரிடம் இருந்து தேர்ந்தெடுப்பதே ஈழத் தமிழர்களின் ஓர் ஆரோக்கியமான செயலாக இலங்கைத் தீவில் இருக்க முடியும்.

அரசியல் இராஜதந்திரத்தில் முதிர்ச்சியற்ற, தங்கள் தோல்விகளை சிறந்த இராஜதந்திரமாக மக்கள் மத்தியில் மாற்ற முனைகின்ற தற்போதைய தமிழ் அரசியல் தலைமைகளை பெரும்பாலும் ஈழத் தமிழர் புறக்கணிப்பதே சிறந்த ஜனநாயக அரசியலின் எதிர்கால தேர்தல் பாடமாக இருக்க வேண்டும்.

அரை நூற்றாண்டுக்கும் மேலாக சொந்த மக்களின் துன்பங்களிலும், இன்னல்களிலும், கண்ணீரிலும் நனைந்து போய் ஒரு வெற்றிக்கான பாதையை தேடும் தற்போதைய தமிழ் அரசியல் தலைமைகள் முற்றாக அரசியலை விட்டு ஒதுங்கி ஈழத் தமிழ் இளம் தலைமுறையினரின் இளைய ரத்தத்துக்கு மனச்சாட்சியோடு வழிவிடுவதே அவர்கள் இதுவரை காலமும் செய்த அரசியலின் மிகச் சிறந்த இராஜதந்திர வெற்றிக்கான ஒரு உபாயமாகப் ஈழத் தமிழர்களால் பார்க்கப்படும்.

தமிழனுக்கு தமிழனே சம உரிமையை கொடுக்க மறுக்கின்றபோது சிங்கள பௌத்த பேரினவாத அரசு எப்படி தமிழர்களின் உரிமையை கொடுக்க எத்தனிக்கும் என்பதை அனைவரும் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள் என்றால், ஈழத் தமிழ் அரசியல் தலைமை காலத்தின் தேவை கருதி இளம் தலைமுறையினரின் கரங்களை அடைவதே மிகவும் நியாயபூர்வமான ஒன்றாகும். சொந்த மக்களின் அழுகுரல் என்று தன் சொந்த ஆன்மாவுக்குள் எதிரொலிக்கின்றதோ அன்றே முருகனின் ஆறுமுகத்தில் ஓர் முகம் அறிவு ரீதியாக, சிந்தனை ரீதியாக ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் இளம் தலைமுறையினரிடம் இருந்து ஈழத் தமிழரின் ஆணைப்படி தோன்றி விட்டதென அர்த்தம் கொள்ளப்படும். அவ்வர்த்தத்தின் அரசியல் வெளிப்பாடே தென்னாசியாவில் இந்தியாவின் முகமாக ஈழத் தமிழர்களை வெகு விரைவில் சர்வதேசத்தின் முன் மாற்றிக் காட்டும்.

**சாம்-ரமேஷ்குமார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீட்பர் கிருஸ்து சிலை (பிரேசில்)



**1932** ஆம் வருடம் ஒக்டோபர் 12 ஆம் திகதி பிரேசிலின் அதிபர் கெட்யூல் வக்காஸ் இந்த சிலையை திறந்து வைத்தார். சிலையைத் திறக்க குறிப்பாக அந்தத் திகதியை தேர்வு செய்ய ஒரு காரணம் உண்டு 1717 ஆம் ஆண்டு சாவோ பாவ்லோ கவர்னர் டாம் பிட்ரோ அல்மெடியா சுற்றுப்பயணமாக விலாரிகா செல்லும் வழியில் பெரைலா நதி அருகே உள்ள சிறிய மீனவ கிராமத்தில் தங்கிச் செல்ல தீர்மானித்தார்.

அத்தனை பெரிய மனிதர் தங்கள் கிராமத்திற்கு விருந்தினராக வருவதால் அவருக்கென உயர்ந்த ரக மீன்களை சமைக்கவேண்டும் என்று தீர்மானித்த மீனவர்கள் மீன் பிடிக்கச் சென்றனர். துரதிர்ஷ்டவசமாக அன்று அவர்களது வலையில் எந்த மீனுமே சிக்கவில்லை.

ஆனால் கன்னி மேரி சிலை ஒன்று வலையில் கிடைத்தது. கவர்னர் தனக்களிக்கப்படும் விருந்தைவிட கன்னி மேரி சிலை கிடைத்ததே மகிழ்ச்சியான விடயம் என்று கொண்டாடினார். மீனர்வகளும் மகிழ்ச்சியில் திளைத்தனர். அந்த சிலையை ஒரு தேவாலயத்தில் வைத்து வழிபட்டனர். அந்த சிலை கிடைத்த நாள் ஒக்டோபர் 12 என்பதால் அந்த நாளை தேர்ந்தெடுத்தனர்.

கார்கோவடோ மலை அடிவாரத்தில் இருந்து புகைவண்டியில் பயணித்து அதன் பிறகு 220 படிகளை கடந்து சென்றால் சிலையை அடையலாம். இப்பொழுது மின்தூக்கிகளும், நகரும் படிக்கட்டுகளும் அமைக்கப்பட்டு விட்டதால் மக்கள் இன்னமும் சுலபமாக சென்று விடமுடியும். 1980 ஆம் ஆண்டு எண்ணெய் நிறுவனம் ஒன்றும் தனியார் வானொலி நிறுவனம் ஒன்றும் சேர்ந்து சிலையை புதுப்பிக்கும் பணியில் ஈடுபட்டு பொலிவாக்கினர்.

சிலை நிறுவப்பட்டு 75 ஆண்டுகள் ஆனதையொட்டி 2006 ஆம் ஆண்டு ரியோடி ஜெனிரோ கத்தோலிக்க கார்டினல் எசோபியோ ஆஸ்கர் ஷீல்ட், 150 பேர் அமர்ந்து வழிபடக்கூடிய சிறிய தேவாலயம் ஒன்றை சிலையின் பீடத்துக்கு அருகே கட்டினார். அங்கு தற்சமயம் எளிய மக்களின் திருமணங்கள் திருமுழுக்கு நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

2008 ஆம் ஆண்டில் பெய்த பெருமழை காரணமாக இடி தாக்கி சிலையின் விரல்கள் புருவம் தலையின் சில பகுதிகள் சிதைந்து போயின. 2010 இல் தனியார் சுரங்க நிறுவனம் மற்றும் கத்தோலிக்க திருச்சபையின் பெருமுயற்சியால் மறுசீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு சரி செய்யப்பட்டன. சக்தி வாய்ந்த இடி தாங்கிகளும் பொருத்தப்பட்டன.

2009 ஆம் ஆண்டு பிரேசிலின் தேசிய பாரம்பரிய சின்னங்கள் காப்பு நிறுவனம் மீட்பர் இயேசு சிலையை அந்த நாட்டு பாரம்பரிய சின்னமாக அறிவித்தது.

பிரேசில் நாடு 2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் விளையாட்டுக்களை நடத்த இருக்கிறது. அதனையொட்டி கார்கோவடோ மலையிலுள்ள இயேசுவின் சிலை போன்றே சிறிய அளவில் 10 அடியில் உருவாக்க திட்டமிட்டுள்ளது. அந்த சிலை நோர்த் லண்டனில் உள்ள பிரிம்ரோஸ் மலைத் தொடரில் வைக்கப்பட உள்ளது.

(தொடரும்...)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2523

**ஸ்ரீகரன்**

அம்மா-மகன் பிணைப்பு





கடவுளே திகைத்து பார்க்கும் பாச நிலை

**கிருத்திகா**

கோபத்துல மொபைலை உடைக்க கை ஓங்கும் போது...




My மூளை : புது போன் வாங்க காசு இருக்கா

Me : இல்ல

My மூளை : அப்போ மூடிட்டு போனை உள்ள வை.

**வினுஜன்**

தன் மகள் கேட்கும் எந்தப் பொருளும்...



வெட்டிச் செலவாய் தோன்றுவதில்லை அப்பாவுக்கு....

**நிவேதா**

ஹலோ... குமார் இருக்காரா....? அவரு குளிக்கிறாரு... நீங்க....!!!



நான் காலைலயே குளிச்சிட்டேன்ங்க....

**சதுர்சன்**



நீ கல்யாணம் பண்ணி உன் குழந்தைக்கு பொம்மை வாங்கி கொடுக்கிற வயசுல நீ வந்து உனக்கு கரடி பொம்மை கேட்கறியே இதெல்லாம் நியாயமா உனக்கு

**சரண்யா**

பிரச்சினைகளைச் சொல்லி வாழ்வது வாழ்க்கை இல்லை...

இதெல்லாம் ஒரு பிரச்சினையான்னு சொல்லிவிட்டு நகர்வது தான் வாழ்க்கை.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

280

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# பாதுகாப்பான மதுபானம் எது?

மதுபானம் பாவிப்பது பாதுகாப்பானதா? மதுபான பாவனையை திடீரென்று நிறுத்திக் கொள்வது ஆபத்தானதா? சிறிதளவு மதுபாவனை உடலுக்கு நன்மை பயக்குமா? பாதுகாப்பான மதுபானம் எது? போன்ற பல தொடர்ச்சியான சர்ச்சைகள் எம் மத்தியில் இருந்து கொண்டிருக்கின்றன.

மதுபானம் பயத்தைப் போக்கி உற்சாகத்தை கொடுக்கிறது என்ற கருத்தும் கஷ்டப்பட்டு வேலை செய்பவர்களுக்கு இது உடல் அலுப்பை போக்கி ஒரு வலி நிவாரணியாக தொழிற்படுகிறது என்ற அபிப்பிராயமும் பொதுவாக இருந்து வருகிறது. அத்துடன் மனச்சஞ்சலத்திற்கு இது மருந்தாகிறது என்று கருதுபவர்களும் இருக்கிறார்கள். எனவே இவை சம்பந்தமான தெளிவான உண்மைகளை தெரிந்து கொள்ள மதுபானம் சம்பந்தமாக நடத்தப்பட்ட மருத்துவ ஆய்வுகள் உறுதுணையாக அமைகின்றன.

மதுபானப் பாவனையால் ஈரல், இரைப்பை, குடல், தொண்டை, களம், மூச்சுக்குழல் போன்ற பல்வேறு உடல் உறுப்புக்களில் புற்றுநோய் ஏற்படும் சந்தர்ப்பம் அதிகரிப்பதுடன் அந்த உறுப்புக்களில் கடுமையான பாதிப்புகளையும் ஏற்படுத்துகின்றன என்பது ஆய்வுகள் மூலம் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. அத்துடன் இளம் வயதினரிடையே காணப்படும் மதுப்பாவனை பழக்கத்தினால் மூளை விருத்தியில் சில நிரந்தரமான பாதிப்புகளும் ஏற்படுகின்றன.

இதற்கு மேலதிகமாக மதுப்பாவனையானது நிறை அதிகரிப்பு, ஆண்மைக்குறைவு, போசாக்குக் குறைவு, மனநல தாக்கங்கள் போன்றவற்றிற்கும் காரணமாக அமைகின்றது. இவ்வாறான பரந்துபட்ட சுகாதார தாக்கங்களை கருத்திற்கொண்டு ஆய்வாளர்கள் சிறிதளவு மது அருந்துவதும் உடல் நலத்திற்கு தீங்கானது என்ற முடிவிற்கு வந்திருக்கிறார்கள்.

பியர், வைன், கள்ளு போன்றவற்றில் மதுவின் செறிவு குறைவாக இருந்தாலும் இவையும் உடல் நலத்திற்கு தீங்கு விளைவிப்பவையே. எனவே பாதுகாப்பான மதுபானம் என்ற ஒன்று கிடையாது. சிகரெட், பீடி போல் மதுபானமும் ஒரு தீண்டத்தகாத பொருளாக சித்திரிக்கப்படுகிறது. இதனை எம் முன்னோர்கள் முன்னமே அறிந்திருந்த தால் தான் மது அருந்துவதை பஞ்சமாபாதகங்களில் ஒன்றாக வகைப்படுத்தி இருக்கிறார்கள்.

கருதிப் பாவிப்பது ஆபத்தான ஒரு நடைமுறையாகும். மனக்கவலையைப் போக்குவதற்கு என்று கூறி மது அருந்துபவர்கள் அந்தப் பழக்க வழக்கத்திற்கு அடிமையாகி பல மனத்தாக்கங்களுக்கு ஆட்படுகின்றனர். எனவே மனக்கவலைக்கு மது ஒரு மருந்து ஆகாது.

அத்துடன் மதுப்பழக்கமானது பல விவாகரத்துக்களுக்கும் வீதி விபத்துக்களுக்கும் தொழில் நிலையைப் பிரச்சினைகளுக்கும் காரணமாக மதுப்பாவனை முற்றாக தவிர்க்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.

பெற்றோர்களின் மதுப்பாவனை பிள்ளைகளில் பல்வேறுபட்ட மனத்தாக்கங்களை ஏற்படுத்துவதுடன் அவர்களும் தீய வழிகளில் செல்வதற்கு தூண்டுகோலாக அமைகின்றது. மது பாவிக்கும் ஒருவர் இன்னொருவரை மது அருந்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளும் தார்மீக உரிமையை இழந்து விடுகிறார்.



மதுபானம் அருந்திய நிலையில் ஒருவரின் திட்டமிடும் திறன், தீர்மானம் எடுக்கும் திறன், சாதுரியமாக நடந்துகொள்ளும் திறன் என்பன பெருமளவில் குறைந்துவிடும் என ஆய்வுகள் தெளிவாகக் காட்டி நிற்கின்றன. சாதுரியமாக நடந்து கொள்ளும் திறன் அற்ற நிலையில் ஒருவர் பேசுவதைப் பார்த்து அவர் பயம் தெளிந்து உற்சாகமாக இருக்கிறார் எனக் கருதிவிட முடியாது. கடுமையான வேலை செய்பவர்கள் தமது உடல் அலுப்பை போக்குவதற்கென்று மது அருந்துவார்களாயின் குறுகிய மற்றும் நீண்டகால அடிப்படையில் அது அவர்களின் உடலில் பல பாரதூரமான தாக்கங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

அத்துடன் காலப்போக்கில் அவர்கள் மதுவுக்கு அடிமையாவதுடன் பல சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். எனவே மதுவை ஒரு வலி நிவாரணியாக அமைகின்றது. மதுவை சிறிது சிறிதாக குறைத்து நிறுத்த முயல்பவர்கள் அதிலே வெற்றி பெறுவதில்லை. அதனை திடீரென்று நிறுத்திக் கொள்வதால் ஆபத்துக்கள் எதுவும் ஏற்படப் போவதில்லை. போதைக்கு அடிமையானவர்கள் அதனை முற்றாக நிறுத்த விருப்பம் இருந்தும் அதனை நடைமுறைப்படுத்த முடியாமல் இருப்பின் அல்லது அதனை நிறுத்தும் பொழுது சில வேண்டத்தகாத அறிகுறிகள் ஏற்படின் அரச மருத்துவமனைகளின் உதவியை நாட முடியும். இவ்வாறானவர்களுக்கு உதவுவதற்கென்று மருத்துவமனைகளில் தனியான பிரிவுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

கொண்டாட்ட நிகழ்வுகளின் பொழுது மது பாவிக்கப்படுவது பல சமூக, சுகாதார, கலாசார, பொருளாதார பாதிப்புக்களை ஏற்படுத்தி நிற்கின்றது. அத்துடன் புதிதாக பலரை மதுப்பாவனைக்கு தூண்டுவதாகவும் அமைந்து விடுகிறது. எனவே கொண்டாட்ட நிகழ்வுகளில் மதுவின் தாக்கங்களை தவிர்ப்பதற்கு அதன் பாவனையை முற்றாக நிறுத்த உறுதிபூணுவோம். எங்கள் நண்பர்களையும் மதுப்பழக்கத்திலிருந்து மீட்க முயலுவோம்.

யாராவது எம்மை மது பாவிக்குமாறு கேட்டுக்கொண்டால் அதனை முற்றாக நிராகரிப்போம். எம்மை மது பாவிக்கத்தூண்டியவரையும் அதன் பாவனையை நிறுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வோம்.

பொது நிகழ்வுகளில் மதுப்பாவனையை தவிர்த்து விடுவதில் பெருமை கொள்வோம். மதுவுக்குச் செலவிடும் பணத்தை சேமித்துப் பயனுள்ள காரியங்களுக்கு பயன்படுத்துவோம். போதையற்ற தேசம் நோக்கிப் பயணிப்போம்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org